REGD. M 4642

# திராவிடநாடு

விலை அணா 2　ஆண்டுசந்தா ரூ 7　இலங்கை 15 சதம்　மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 3—10—48 | இதழ் 16

## 'ஆச்சரியமடைந்தேன்!'

—✲—

"கவர்னர் ஜெனரலுக்குக் கொள்ளைச் சம்பளம் தரப்படுவதை அவசியமானது என்று, பண்டிதநேரு வாதாடினது கேட்டு நான் ஆச்சரியமடைந்தேன். விலைவாசிகள் உயர்ந்துள்ளன என்ற போதிலும், இந்நிலையிலும், காங்கிரஸ் தீட்டிய திட்டமான, மாதம் ஐந்நூறு ரூபா சம்பளம் பெறுவது பொருத்தமான காரியம் என்றே நான் கூறுவேன். மக்களின் நிலையைக் கவனித்தால், இது நியாயமென்றே தோன்றும்" என்று டில்லி சட்டசபையில், பாபுராம் நாராயண்சிங் ஆகஸ்ட் 30-ந்தேதி, கூறினார்.

# பெரியார் பிறந்தநாள் விழா

தமிழ்நாடு எங்கும், பெரியார் அவர்களின் எழுபதாம் ஆண்டு பிறந்த நாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. தொடர்ந்து கொண்டாடப்பெற்று வருகின்றது.

காஞ்சிபுரத்தில் இரண்டு இடங்களில் விழா கொண்டாடப்பெற்றது.

19—9—48 ஞாயிறு அன்று பெரியகாஞ்சிபுரத்தில் செங்கைகொண்டான் மண்டபத்தை அடுத்துள்ள இடத்தில் கூட்டப்பட்ட கூட்டத்திற்குத் தோழர் C. D. T. அரசு தலைமை வகித்து, பெரியார் அவர்கள், பொதுவாக மக்களுக்கும் குறிப்பாக திராவிடர்களுக்கும் செய்த—செய்து வருகின்ற சேவைகளை, முப்பது நிமிஷங்களுக்கு அதிகமாக எடுத்துக் கூறினார். கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் பங்கு கொண்டனர். ஒலிபெருக்கியும் வைக்கப்பட்டிருந்தது.

சென்னைக் கல்லூரியில் பயின்று வருபவரும் காஞ்சிபுரத் தோழருமான கணபதி அவர்கள், பெரியார் ஆற்றிய தொண்டின் சிறப்பை, வெவ்வேறு காலங்களில் பல்வேறு நாடுகளில் அறிவியல் பணிபுரிந்த அறிஞர்கள் பலருடன் ஒப்பிட்டுப் பேசினார்.

பின்னர், காஞ்சி. கலியாணசுந்தரன் உணர்ச்சி ததும்ப ஒரு மணி நேரத்திற்கு அதிகமாக, பெரியார் அவர்கள் கடந்த முப்பது ஆண்டுகளாகத் தமிழ் மக்களுக்குச் செய்து வரும் அரும்பெரும் காரியங்களை எடுத்துக் காட்டிவிட்டு, கட்டாய இந்தி நுழைவால் தமிழ் மொழி கெடுவது நிச்சயம் என்றும், மொழி கெடுவதின் பயனாகத் தமிழர் பண்பும் கலையும் நாகரிகமும் நசித்துவிட வழி ஏற்படுமென்றும், 'ஜாதி' என்னும் சொல் அறியாது, மக்களை மக்கள் உயர்வு தாழ்வு பேசும் பேதபுத்தி தெரியாது, அறிவுக்கும் அனுபவத்திற்கும் உட்பட்ட கருத்துக்களையே சிறந்ததெனக் கொண்டு, சீரிய சிந்தனையாளர்களாக வாழ்ந்து, தங்கள் புகழ் இமயம் முட்டவும் பர்மா எட்டவும் பரப்பி, கலங்கள் கட்டி கடல் கடந்து கிரீக் எகிப்து முதலிய நாடுகளுடன் வர்த்தகம் செய்து வாழ்ந்து, செல்வமும் பற்றச் சிறப்புகளும் உள்ள நாடாகத் தங்கள் தாய்நாட்டைத் திருநாடாகத் திகழச் செய்த தமிழர்கள்—திராவிடர்கள், வடமொழி புகுந்த காரணத்தால் வாழ்க்கை வரண்டு, மூடமதியிலே மூழ்கி, அறிவுக்குப் பொருந்தா ஆபாசக் கருத்துக்களைத் தாங்கி நிற்கும் பொருந்தாப் புராணங்களில் நம்பிக்கைகொண்டு நலிந்து நசித்து வந்ததையும்—வருவதையும் விளக்கிக் கூறிவிட்டு, இந்தி நுழைந்தால் மேலும் தமிழர் வாழ்வும் தமிழ் மொழியும் அழிந்துவிடுவது உறுதி என்றும் குறிப்பிட்டார்.

இன்று இந்தியாவிற்குக் கிடைத்துள்ள அரசியல் விடுதலையின் தன்மையையும், மாற்றான் பிடியில் சிக்கிக் கிடந்த மற்ற நாடுகளில் இதேபோன்று விடுதலை ஏற்பட்ட பின்னர் அங்கங்கு ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களையும் விளக்கிக் கூறிவிட்டு, அந்த தேசிய விடுதலைதான் இன்று இந்திய பூபாகத்திற்குக் கிடைத்திருக்கிறது என்றும், அதிகாரத்தில் அமர்ந்திருப்பவர்கள் தாங்களாக முன்வந்து மக்களுக்குச் சுகவாழ்வு அளித்துவிட மாட்டார்கள் என்றும், விழிப்புணர்ச்சியோடும், தங்கள் தேவைகளையும் உரிமைகளையும் நன்கு தெரிந்துகொண்டு, அவைகளைப் பெறக்காட்டப்படும் ஆர்வத்தின் அளவைப் பொருத்துத்தான் அதிகார பீடத்தில் இருப்பவர்களும் இறங்கி வருவார்களென்றும், அதற்கான பணி புரிய வேண்டிய பொறுப்பு நமது கழகத்திற்கு எதிர்காலத்தில் ஏராளமாக இருக்கிறது என்றும், அதற்குத் தங்களைத் தகுதியுடையவர்களாக ஆக்கிக் கொண்டால்தான், பெரியாரின் லட்சியமான 'திராவிட நாடு' ஏற்படுவதற்கு வழி பிறக்கும் என்றும் குறிப்பிட்டார்.

பிறகு, தோழர் C. V. M. அண்ணாமலை அவர்கள், பெரியாரின் செயற்கரிய செயல்களைச் சித்தரித்துக் காட்டினார்.

உள்ளூர் திராவிடர் கழகத் தலைவர் தோழர் V. கண்ணப்பனார் நன்றி கூற, பெரியார் வாழ்க எனும் முழக்கத்துடன் விழா முடிவுற்றது.

26—9—48-ல், கோட்டாம்பாளையம் மறுமலர்ச்சிக் கழக சார்பில் 'பெரியார் விழா' பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் M. இரத்தினம் அவர்கள் தலைமை தாங்கி, பெரியாரின் சிறந்த சேவைகளை குறிப்பிட்டார்.

(16-ம் பக்கம் பார்க்க)

மாகாண முழுவதும் **மதுவிலக்கு** திட்டம் வந்துவிட்டது

பலகோடி ரூபாய் வருமானம் போனாலும், ஏழையின் வாழ்வைக்கெடுத்து, இழிமனிதனாக்கும் பாழும் குடி ஒழிந்தால் போதும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் மாகாண சர்க்கார், மதுவிலக்குத் திட்டத்தை மாகாண முழுவதற்கும் அமுலுக்குக் கொண்டுவந்துவிட்டனர். இந்த மகத்தான திட்டம் வெற்றிபெற, மனிதாபிமானமுள்ளவர் அனைவரும் பாடுபட வேண்டும்.

**மதுவிலக்கு**

வெற்றி பெற உதவுங்கள்

# ★ எங்கும் ஈரோடு! ★

அம்மையின் மூக்குத்திருகு மூன்றரை இலட்சம ரூபாய் பெறுமானம் உள்ளது.

ஐயனின் வைரமுடி, முப்பது இலட்சமாமே!

ரங்கனின் முத்து அங்கி, சாமான்யமான விலையா! திருடனிடம் கொடுத்தால் கூட, ஐம்பது இலட்சம் தருவானே!

பாண்டுரங்கனின் மார்பிலேஉள்ள மாலையில் புதைத்திருக்கும் பச்சை—உள்ளங்கை அகலமிருக்கும்—உலகிலேயே அது போன்ற பச்சை கிடையாது—விலை, இன்னமும் யாரும் மதிப்புப் போட்டதே இல்லை!

திருமலை திருப்பதியிலே உள்ள திவ்யாபரணங்கள் மட்டும், எத்தனையோ கோடி ரூபாய் விலை உள்ளவாம்.

தில்லையில்மட்டுமென்ன குறைவா! திருவண்ணாமலையிலே, அண்ணாமலையாரிடம் உள்ளது கொஞ்சமா!

* * *

பக்த கோடிகள் பரவசத்துடனும், பொருளாதார நிபுணர்கள் பரிதாபங் கலந்த ஆச்சரியத்துடனும் பேசுவர், இவ்விதம், நமது நாட்டுக் கோயில்களிலே உள்ள நகைகளின் பெருமதிப்பைப் பற்றி.

வெள்ளைக்காரக் கவர்னர்களின் முன்பு பட்டு அங்கியை விரித்து அதன்மீது, இந்த ஆபரணங்களைப் பரப்பி வைத்துக்காட்டுவர், கோயில் நிர்வாகிகள்—பூரிப்புடன்—பெருமையுடன்.

இந்தக் "குபேரசம்பத்தை"க்கண்டான பிறகு, கவர்னர்கள், 'கோவணாண்டிகளாக' உள்ளகுப்பனும் சுப்பனும் அரைப்பட்டினியாக இருப்பதைக் கூறி, அதற்குக் காரணம், கிராமத்துக்கு ஆறு கிடையாது, ஏரி உண்டு, அதற்குச் சரியான கரை கிடையாது, என்பன போன்ற தகவல்களைத் தந்து, "தர்மப்பிரபு" ஏழைகள் மீது கிருபை வைத்து, 'காருண்ய மிகுந்த சர்க்கார்' இந்த ஏழைகளின் கஷ்டத்தைப் போக்குவதற்கான, "திரவியசகாயம்" செய்ய வேண்டுமென்று 'பிரார்த்தித்து' மனு சமர்ப்பிக்கும், ஊர்ப்பிரமுகர்களைக் கண்டுவிட்டு, போடார் ஏறுவார்கள்.

நவரத்னங்களையும் கண்டார்கள் நடைப்பிணமாகும் ஏழைகளையும் கண்டார்கள்!! இது, நெடுங்காலய நிலை.

பல தலைமுறைகளாக, பலப்பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள, விலையுயர்ந்த நவரத்னங்கள்—கல்லிழைத்த நகைகள்—தங்க ஆபரணங்கள்—தங்கம் வெள்ளி ஆகியவைகளாலான சாமான்கள்—தங்கத்தில் சிங்கம், வெள்ளியில் ரிஷபம்—பச்சைக்கல் பதித்த மயில்—கோமேதகக் கண்களுடன் கருடன்—குங்குமக் செம்பு புதைத்த அன்னம்—வெள்ளித் தேர் அதற்குத் தங்கக் குடை—இப்படிப்பட்டவைகள், கோயில்களிலே தூங்கிக் கொண்டுள்ளன.

இவ்வளவும், இங்கு, தாது வருஷப் பஞ்சம்—வங்காளப் பஞ்சம்—பீகார் பூகம்பம்—கங்கைப் பெருக்கம்—காவிரி உடைப்பு—காலராக் கொடுமை—உணவுத் திண்டாட்டம்—போன்ற பற்பல, பதைபதைக்கும் சம்பவங்களின் போதும், பரமனின் பெயரால், சிறையில் வைக்கப்பட்டிருந்தன. பக்தர்கள், இந்தப் பணத்துக்கு வட்டி பெறுகிற இடம் பரலோகம் என்று நம்பி, இந்த பகவான் பாங்கியில், பெரும்பொருளை டிபாசிட்டாகக் கட்டி வந்தனர், தலைமுறை தலைமுறையாக.

இவ்வளவு பெரும்பொருள் முடங்கிக் கிடப்பதால், எவ்வளவு பெரிய பொருள் நஷ்டம், தொழில் வளக் குறைவு, ஏற்படுகிறது என்பது பற்றிய எண்ணமே ஏற்படவில்லை. மேலும்மேலும், தத்தமது சக்தியானுசாரம், கைங்கரியம் செய்த வண்ணம் இருந்தனர். அவ்வப்போது அம்மனின் தாலியும் ஐயனின் பூணூலும், குதிரையின் வாலும், யானையின் தந்தமும், மயிலின் தோகையும் மரகத வளையலும், காணாமற் போய் விடும்—போனால் என்ன—பக்தர்கள் பதைப்பர்—புலன்விசாரிப்பர்—முடிவு தெரியுமுன்னம், மூர்த்திக் கொண்டு வருவார் ஒருபுதிய பக்தர், காணாமற் போனதைப் புதிதாகச் செய்து தர! அவர், கள்ளக் கையொப்பத்தின்மூலம் கனதனவானானவராக இருக்கக்கூடும்! இருந்தால் என்ன! காணிக்கையாக அவர் தரும் பொருளால், அந்தக் கதையைக் கூறவா முடியும்!!

இப்படிப் பெரும்பொருள் பலதலைமுறைகளாக— சரியான கணக்கும் குறிப்புமற்று—இருந்து வருகிறது, இந்த நீண்ட காலத்தில்—தஞ்சாவூர் அரண்மனை கலனாகி இருக்கிறது, செஞ்சிக்கோட்டை பாழாகி இருக்கிறது,—ஊமையன் கோட்டை மண்மேடாகி இருக்கிறது—எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன—இந்த மாறுதல்களும், குழப்பங்கள் கொந்தளிப்புகள், அரசு மாற்றங்கள் சிறு சிறு படையெடுப்புகள், ஆகியவைகள் நேரிட்டன—இந்த நிலையிலே, பலதலைமுறைகளுக்கு முன்னம் கோயில்களிலே காணிக்கை செலுத்தப்பட்ட விலையுயர்ந்த நகைகளிலே எவ்வளவு காணாமற் போய் விட்டனவோ, எவ்வளவு நவரத்னங்கள் இடம் மாறிவிட்டனவோ, யார் கண்டார்கள்!! இவ்வளவு பெரும் செல்வம், குறிப்பும் குறிக்கோளுமற்று, கோயில்களிலே, இருந்து வருகிறது.

பொது மக்களின் கவனத்திற்கு, இந்த நிலையை முதன் முதல் கொண்டு வந்தவர்கள்—கொண்டு வந்ததன் மூலம் பொது மக்களின் கோபத்துக்கே கூட ஆளானவர்கள்—சுயமரியாதைக்காரர்கள்தான்.

நாட்டிலே உள்ள ஏழ்மையையும் திருக்கோயில்களிலே உள்ள செல்வத்தையும், ஒருசேர எடுத்துக் கூறி, ஏழையை ஈடேற்ற வழி தெரியக் காணோமே என்று சர்க்கார் ஏக்கம் கொண்டதாகக் காணப்படுவது, வெண்ணெயிருக்க நெய்யில்லையே என்று அழும் போக்காகத் தெரிகிறது, என்று எடுத்துரைத்தவர்கள்—பலமான எதிர்ப்புக்கிடையே எடுத்துச் சொல்லி வந்தவர்கள்—சுயமரியாதைக்காரர்கள்தான். இதை நாடு அறியும்—நாடாளும் சர்க்காரும் அறியும்.

இந்தப் "புண்யபூமியில்" மட்டுமல்ல, பூலோகத்தில் எந்த நாட்டிலேயும், செல்வம் சேர்த்தும், பக்தி

மான்கள் துவக்கத்திலே இப்படித்தான், பூஜாலயங்களிலே, பெரும் பொருளைக் குவித்திருக்கின்றனர்

மண்டிக் கடையில் கணக்கெழுதும் மகாலிங்கம், நாலுகாசு சம்பாதித்து, தனிக்கடை வைத்து, ஒரு குறிப்பிடத்தக்க புள்ளியானவுடனே அதற்கு முன்பு கழுத்திலே இருந்த சாதாரண உருத்திராட்சத்துக்குப் பதில், தங்கக் கவசமிட்ட உருத்திராட்சம் அணியவும், மரத்தாலான விபூதி மடலுக்குப் பதில் வெள்ளியாலான விபூதி மடல் வைத்துக் கொள்ளவும், பழனிக்குச் சென்று மூன்று பண்டாரத்துக்குச் சோறிடுவதற்குப் பதில், பழனி கோயில் படிக்கட்டுக்கூத் தங்கத் தகடு அடிக்கவும், ஆக இவ்விதமாகவேதான், தனது பக்தியைப்பிரகாசிக்கச் செய்கிறான்.

இந்தத் தனி மனிதனின் சுபாவந்தான், நாட்டுக்கும் சுபாவமாகிறது.

இம்முறையிலே, ஆதிநாட்களிலே, 'கண்ணப்ப நாயனார்' கதையில் கூறப்படுவது போல, காட்டுமலரையும் வேகவைத்த இறைச்சியையும் படைத்த பக்தன், பிறகு, பொன்னையும் மணியையும் பூஜைச்சாமான்களாக்கினான்.

பலநாடுகளிலே, காணிக்கைகளைக் குவிக்கும் சுபாவம், பரவி, கோயில்கள் அரசர்களின் வீடுகளை விட அதிகமான செல்வத்தின் இருப்பிடங்களாயின.

அறிவுத் தெளிவும் அதன் பயனாக ஆண்டவனைப் பற்றிய தெளிவும் ஏற்பட்ட பிறகே உலகிலே, பல நாடுகளில், இபபடிப் பொருளை முடக்கி வைப்பது, ஏழையை உயர்த்தி வாழ்வை வளமாக்குவதற்குப் பயன்படக்கூடிய பொருளை வீணாக, கிரீடமாகவும், பதக்கமாகவும், கவசமாகவும் வட்டிலாகவும், பாதக்குறடாகவும் பல்லக்காகவும், நாக ரூபத்திலும் தேருருவிலும் முடமாக்கி வைப்பது, பக்திக்கோ, பரமனின் பெருமையைப் பாரறியச் செய்வதற்கோ, பாமரரின் வாழ்வை வளமாக்குவதற்கோ, பயன்படுவதல்ல, எனவே, இந்த வீண்வேலையை நிறுத்திவிட வேண்டும்' இந்தப் பொருள்களை பள்ளிக்கூடங்களாக, வைத்யசாலைகளாக, ஏழை விடுதிகளாக இல்லாமை நோய்க்கு மருந்திடும் இதம்புரிச்சாலைகளாக மாற்றியமைக்க வேண்டும், என்ற மாண்பு ஏற்பட்டது.

பற்பல நாடுகளிலும் வேக வேகமாக இந்தப் பண்பு ஏற்பட்டது.

கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்பவனுக்குத் தரப்பட்ட மதிப்பு மங்கி, பள்ளிக்கூடம் அமைத்துக் கல்வித் தொண்டு செய்பவனுக்கு மதிப்பு உயரத் தொடங்கிற்று.

பஜனைக் கூடங்கள் கட்டும் பயனற்ற காரியத்தைப் பழமையை விடவே முடியாத சிலர் கட்டி அழுதனர்—புதிய பண்பினர், பல்கலைக் கழகங்கள் அமைக்கலாயினர்.

உலகிலே இவ்வளவு மாறுதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலும் கூட, நமதுநாட்டிலே மட்டும், தங்க ரிஷபத்தின் மீது சிவனார், உலாவந்துகொண்டுதான் இருந்தார்-இருந்தாரா?—இருக்கிறார்!!

கண்டனத்துக்கும் ஏளனத்துக்கும் ஆளான சுயமரியாதைக்காரன் மட்டும மனதிலே கற்பனை கண்டவண்ணம் இருந்தான் — இந்தப் பெருமபொருள், விடுதலை பெற்று, நாட்டிலே ஆலைகளாகவும் கல்வி நிலயங்களாகவும், வைத்திய விடுதிகளாகவும், வகையற்றோரின் பராமரிப்புச் சாலைகளாகவும், மாறும் ஒரு காட்சியைக் கண்டு வந்தான். இன்றும், இவை, கற்பனைக் காட்சிகள் தான்! இன்னும் சில காலத்துக்கு, கற்பனைக் காட்சிகளாகவே இருக்கும்—ஆனால் நீண்ட காலத்துக்கு அல்ல—விழிப்புநாள் விரைந்து வருகிறது—அறிகுறிகள் ஆயிரம் தெரிகின்றன.

சின்னாட்களுக்கு முன்பு திருவண்ணாமலையிலே ஏதோ ஓர் அலுவலின் போது பேசிய அரசாங்க அதிகாரி ஒருவர், கோயிலுக்குச் செலவிடும் பணத்திலே ஒரு பகுதியையாவது கல்விக்காக என்று தரலாகாதா?—என்று கேட்டார். அவ்வளவுதான் அவர் கேட்கமுடியும்—அதற்கே அவர் மீது சிலருக்கு ஐயம் பிறந்துவிட்டிருக்கும். ஆசாமிக்கு ஈரோட்டு ஜுரமோ? என்று கேட்பர்.

ஓரளவுக்குத்தான், என்றபோதிலும், ஒரு உயர்தர அதிகாரி, கோயில் காரியத்துக்கு அதிகமான பணத்தை இந்நாட்டுமக்கள் செலவிடுகிறார்கள், ஆனால் அந்த ஆர்வம், கல்விக்காகச் செலவிடுவது என்பதிலே வருவதில்லை, என்பதை உணருகிறார்—உணர்ந்ததை உள்ள உறுதியுடன் ஊராருக்கு உரைக்கவும் முன்வருகிறார், என்பதை, எடுத்துக்காட்டும் சம்பவமல்லவா அது. கோழி கூவுகிறது, என்றல்லவா பொருள்! சுயமரியாதைக்காரர் இந்தக் குறிப்புகளைக் கண்டு களிப்படைகிறார்கள்.

"இவ்வளவு பணம் குவிந்துகிடக்கிறது கோயில்களில்," என்று, மட்டுமே, பொதுப்படையாக, சுயமரியாதைக்காரர்களால் பேச முடிந்தது-புள்ளி விவரம் பூரணமாக—கிடைக்காததால் அல்ல, இல்லாததால்.

இப்போது, நமது மாகாண சர்க்கார், இந்தப்புள்ளி விபரத்தைத் தயாரிக்கப் போகிறார்கள் என்ற செய்தி கேட்டுப்பூரிப்படைகிறோம்.

செப்டம்பர் 26ந் தேதி 'இந்து' இதழில வெளிவந்துள்ள ஒருசெய்தியினால், இந்தத் தகவல் தெரிகிறது.

"சென்னைமாகாணத்தில் கோயில்களிலும், மதஸ்தாபனங்களிலும், உள்ள, நகைகள், நவரத்னங்கள், விலையுயர்ந்த சாமான்கள், ஆகியவற்றின் முழுவிபரம், மதிப்பு ஆகியவற்றைச் சேகரித்துக் குறிப்பெடுப்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப் பட்டாய்விட்டன.

விலையுயர்ந்த இந்தக்கோயில் திருவாபரணங்கள் கீர்த்தி வாய்ந்தன—ஆனால் இதுவரை, அவைகளின் 'மதிப்பு' எவ்வளவு என்பதை நிர்ணயிக்கவோ, அவைகள் சரியானபடி பாதுகாக்கப்படுகின்றனவா, என்பது பற்றிய ஏற்பாடுகளைச் செய்யவோ, ஒரு முயற்சியும் எடுத்துக்கொள்ளப்பட்டதில்லை. நவரத்ன கற்களைப்பற்றிய நிபுணர் ஒருவர், தங்க நகை நிபுணர், கலைஞர் ஒருவர், ஆகியோரின் உதவியுடன், இந்துமத பரிபாலன போர்டாரின் முன்னாள் செயலாளர், அ. பாலகிருஷ்ணன் அவர்கள், மேற்படி திருவாபரணங்களைப் பரிசீலனை செய்து குறிப்புத் தயாரிபபதற்காக நியமிக்கப்பட்டுள்ளார். பழையகுறிப்புகள் இருந்தால், அதே முறையில் நகைகள் உள்ளனவா, என்பதுபற்றி அவர் குறிப்பெடுப்பதுடன், இந்த திருவாபரணங்களின் பாதுகாப்புக்கான தமது யோசனைகளையும் கூறுவார்."

இது 'இந்து'வில் வெளிவந்த தகவல்.

(14-ம் பக்கம் பார்க்க)

# சந்தித்தனர்!

இருவரும், ஆறடி உயரமுள்ளவர்கள்—திடகாத்திரமானவர்கள்.

இருவரும் போரில் புலிகள்—போர்த்திறனுடன் அனுபவமுமுள்ளவர்கள்.

இருவரிடமும், படைகள் இருந்தன.

ஒருவருக்கொருவர், சலாமிட்டபடி சந்தித்தனர் இருவரும்—ஆனால் ஒருவர் சரணடையவந்தார், மற்றவர் சரணாகதியை ஏற்றுக்கொண்டு, அபயமளிக்க வந்தார்.

சரண்புகுந்தவர், நிஜாம் சமஸ்தானப்படையின் தளபதி, எல்ட்ரூஸ்.

சரணாகதியை ஏற்றுக்கொள்ள வந்தவர், இந்திய யூனியன்படையிலே தளபதி, சௌத்ரி என்பார்.

அன்று இருவரும், சந்தித்தனர். இருவரும், இதற்கு முன்பு பல தடவை, சிகந்தராபாத்தில், ஒருவரை ஒருவர் சந்தித்திருக்கின்றனர்.

அப்போதெல்லாம், நிஜாம், ஒரு பித்தனின் பேச்சை நம்பிக் கெடக்கூடும் என்ற நிலை இல்லை. எனவே எல்ட்ரூசும், சௌத்ரியும் நண்பர்களாகவே சந்தித்தனர். பிறகோ, அவ்விருவரையும ஒருவரை ஒருவர் வீழ்த்துவதற்கு முயற்சிக்கும் விபரீதப் போர்ச்சூழ்நிலை ஏற்பட்டது. களத்திலே, இருவரும், ஒருவரை ஒருவர் தாக்கும் நிலையில சந்திப்பார்கள், என்று பலரும் எண்ணினர்.

ஆனால், இருவரும் அன்று சந்தித்தனர்—பழயமுறைப்படி, சரிசமமான நிலையில் அல்ல—சச்சரவிடும் இருபடைகளின் தலைவர்கள் என்ற விரோத நிலையிலுமல்ல—ஒருவர் சரண் அடைய முன்வந்த நிலையிலும், மற்றவர் சரணாகதியை ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கும் நிலையிலும்—சந்தித்தனர்.

* * *

இரு அமைச்சர்கள் சந்தித்தனர். இருவரும் கல்வி அமைச்சர்கள். ஒருவர், தன் நாட்டிலே கல்வித்திட்டம் எவ்வளவு வெற்றிகரமாக நடைபெறுகிறது என்பதைக் களிப்புடன் கூறினார். மற்றவரோ தன்நாட்டிலே, கல்வித்திட்டத்திலே களிப்படையக்கூடிய வெற்றி கிட்டவில்லை, என்ற கவலைக்கதையைக் கூறினார்.

இருவரும் அமைச்சர்கள்—கல்வி அமைச்சர்கள்.

வெற்றிக்களிப்புடன் பேசிய அமைச்சர் சின்னஞ்சிறு சிலோன் நாட்டவர்.

கவலையுடன் பேசியவர், 'பாரதத் திருநாட்டிலே' சென்னை மாகாணத்திலே, அமைச்சர்.

"இலங்கையில், சர்வகலாசாலைப் படிப்பு உட்பட கல்வி இலவசமாக அளிக்கப்படுகிறது. கல்லூரிப் படிப்பை விரும்புகிறவர்கள் ஒரு பரிட்சை எழுதவேண்டும். இதில் தேறிவிட்டால் அப்படித் தேறியவர்களுக்கு இலவசமாகக் கல்வி போதிக்கப்படுகிறது"

என்று சென்னை மந்திரியிடம் சிலோன் மந்திரி சொன்னார்.

இந்தச் சந்திப்பின்போது, வெற்றிக்களை சிலோன் மந்திரி முகத்திலும், வேதனைக்குறி, நமது மாகாண மந்திரி முகத்திலும் இருந்துதானே இருக்கும்!

பணபலத்திலேயும் நாட்டுவளத்திலேயும் எல்லா வகையிலும் நமது மாகாணம் சிலோனைவிட, உயர்ந்தது. எனினும், இங்கு கட்டாய இலவச ஆரம்பக் கல்வித் திட்டத்துக்கு வழி இல்லை. இந்தநிலையிலுள்ள நமது கல்வி அமைச்சர், கல்லூரித் திட்டம் வரையில் இலவசமாகக் கல்வி வசதி அளிக்கும் திறம்படைத்த சிலோன் மந்திரியைச் சந்தித்தபோது, 'நம்மவர்' முகத்திலே என்ன 'பாவம்' இருந்திருக்கும். மனக்கண்ணால் பார்க்கும்போது, நன்றாகத் தெரிகிறது!

* * *

வருகிறது தசரா! இருமகாராஜாக்கள், சந்திக்கப் போகின்றனர்.

ஒருவர் வெறும் மகாராஜா மட்டுந்தான்! இன்னொருவர் மகாராஜாவுடன் கவர்னராகவும் உள்ளவர்.

"நமது பிரஜைகள் முன்பு பெரிய கிளர்ச்சிகள் செய்து, அராஜகம் விளைவித்தனர். பிறகு அமளி அடங்கிற்று. இந்திய சர்க்காரின் நட்பும் எனக்குக் கிடைத்தது. எங்கே இந்தக் கொந்தளிப்பினால் நமது ராஜ நிலைக்கே ஆபத்து வந்துவிடுகிறதோ என்று கூடப் பயந்துபோனேன். சாமுண்டீஸ்வரி கடாட்சத்தாலே மலை போல வந்த துன்பமும் ஆபத்தும் பனிபோலநீங்கிற்று. இப்போது நான் மனநிம்மதியோடு வாழ முடிகிறது. நமது பிரஜைகள் நம்மை வழக்கம்போல அன்புடன் மகாராஜா மகாராஜா என்று அர்ச்சிக்கிறார்கள். எல்லாம் படேல்ஜீயின் பரிபூரண கடாட்ச பலன்தான்" என்று மைசூர் மகாராஜா கூறுவார்.

"அதிலென்ன சந்தேகம். எங்கள் பக்கத்திலேயும் 'ரகளை'கள் சதா நடந்து வந்தன. சமஸ்தானக் காங்கிரஸ் கிளர்ச்சியினால், நமது பிரஜைகளும் ராஜபக்தியற்று புரட்சிக்காரராகி விடுவர் என்றே நமும் கருதிக் கவலைப்பட்டோம். காங்கிரஸ் மகாசபையும் சமஸ்தானக் காங்கிரசுக்கு தூபமிட்டபடி இருந்ததால் நமக்கும் காங்கிரசின் மீது கடுங்கோபந்தான். ஜனங்கள் தகாத முறையிலே குழப்பம் விளைவித்து, "ராஜரீகத்துக்கே" ஆபத்து ஏற்படுத்தி விடுவார்களோ என்று நாமும் அஞ்சினதுண்டு. மேலும், சமஸ்தானாதிபதிகள் எனபோர், கேவலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் சிருஷ்டித்த அலங்காரப் பொம்மைகள், சுயராஜ்ய இந்தியாவிலே, இந்தப் பொம்மைகளுக்கு இடம் கிடையாது, எங்கும் ஜனநாயக ஆட்சியே அமைக்கப்படும், ராஜா, மகாராஜா, நவாபு, நிஜாம், என்ற ஜரிகை குல்லாக்காரர்களின் காலம் மலை ஏறிவிடும், என்றெல்லாம் மேடைகளில் பேசினர்—பத்திரிகைகளிலே எழுதினர—கேலிப்படங்கள் போட்டுக் காட்டினர். வரிவசூல் கஷ்டமாகிவிட்டது. நாம் போடும் சட்டங்கள் பயனற்றுப் போயின. ராஜரீகமே பாழாகிவிடும், என்றுதான் நாமும் பயந்தோம். ஆனால் படேல்ஜியின் கிருபாகடாட்சத்தால், நமது தொல்லை நீங்கிற்று, ஆபத்து ஒழிந்தது, ராஜ்யம் நிலைத்தது, அதுமட்டுமா, பாருமே அவருடைய அபிமானத்தை, அன்பை, நம்மை, இந்தச் சென்னை மாகாணத்துக்குக் கவர்னருமாக்கினார். என் ராஜ்பத்திலேயே நான் ராஜாவாக இருப்பது முடியுமோ முடியாதோ என்ற பயமும் கவலையும் ஏற்படும் அளவுக்கு

ராஜீயக் கலகமும் குழப்பமும் இருந்துவந்தது. இப்போது, பவநகர் பட்டம் நிலைத்ததோடுகூட, சென்னைக் கவர்னர் என்ற புதிய பதவியும் பட்டமும் ஏற்பட்டது.”

சென்னைக் கவர்னராக உள்ள பவநகர் மகாராஜா இப்படிக் கூறிட, மைசூரார் மனக்களிப்பும் பெருமையும்விளங்க,“ராஜாகூடாது,ஜரிகைக் குல்லா கூடாது-ஜனநாயகமேவேண்டும் என்றெல்லாம் கூவிக்கொண்டிருந்த ஜனங்களைப் பார்த்தீர்களா, இப்போது, ‘கப்சிப’ என்று வாயை மூடிக்கொண்டார்கள்.” என்று கூறியபடி, பவநகருக்குத் தமது அரண்மனை வசீகரங்களைக்காட்டி மகிழ்விக்கும், அரிய சந்திப்பு நடைபெற இருக்கிறது.

* * *

“தில்ரூபா வாசிப்பேன்! தபேலா வாசிக்கவும் தெரியும்!!” — என்றார் மகாராணி. பேட்டி கண்டு பேசினவர், பிரமித்துப் போகாமலிருக்க முடியுமா? மகாராணி, தபேலா வாசிப்பது என்ற செய்தி கேட்டு, ஆச்சரியமாக இருக்கிறதோ! எங்கள் குடும்பத்திலேயே, கலைப்பிரேமை நிரம்ப உண்டு, என்று கூறி, மேலும் சில தகவல்களைத் தந்தார் மகாராணியார்.

“என்குமாரி அம்சாவுக்கு, நடனத்திலே ஆசை! என் குமாரர்கள், தில்ரூபா, சித்தார், வாசிப்பார்கள். ஒரு குமாரர், ஓவியத்திலே நிரம்ப ஆசைகொண்டவர். பிள்ளைகளுக்கு, M. S. பாட்டென்றால் ரொம்பப் பிரியம். ருக்மணி தேவியின் நாட்டியத்தை நான் பார்த்திருக்கிறேன்” என்று மகாராணி கூறினார். கலைஞானப், இவ்வளவு பூரணமாக விளங்கும் ராஜ குடும்பத்தை, பேட்டி கண்டவர் போற்றாதிருக்க முடியுமா! அவரை மேலும் பரவசத்திலாழ்த்தும் செய்தியைத் தந்தார் மகாராணியார்.

“ரமணரிஷி, அரவிந்தர் ஆகியோர்களைத் தரிசிக்க வேண்டுமென்று ஆவலாக இருக்கிறது. எமக்குக் குரு, சங்கராச்சாரியார். அவரையும் தரிசிக்கவேண்டும்”—என்றார். பலே! சபாஷ்! கலைஞானத்துடன் மதப் பற்றும் நிரம்பியிருக்கிறது இந்தராஜகுடும்பத்தில், இஃதன்றோ சிலாக்கியமானது—என்று, சந்தித்தவர் பூரித்திருக்கத்தானே வேண்டும். மகாராணியார், மேலும் கூறினார், “யோகாசன சம்பந்தமாகவும், பற்று உண்டு. பொதுவாகவே, மதப் பற்று அதிகம் உண்டு” என்றார்.

இப்படிப்பட்ட மகாராணியார் தானே, நமது நாட்டு, மைலை திருவல்லிக்கேணிகளுக்கு, உச்சிமேல் வைத்துப் போற்றப்படக் கூடியவர்களாகத் தோன்றுவர். இந்த ராஜ குடும்பம், பிரக்யாதி பெறத்தான் போகிறது — என்ற சந்தோஷம் கலந்த நம்பிக்கையுடன், பேட்டி கண்டவர் திரும்பினார். ஓஹோ! தில்ரூபா தபேலா வாசிக்கும் திவ்ய கலைஞானமும், சங்கரர் அரவிந்தர் ரமணர் ஆகியோரைத் தரிசிக்க வேண்டுமென்ற பக்தி மார்க்க உள்ளம் படைத்தவருமான, அந்த மகாராணியார், யார் என்று கூற மறந்துவிட்டேனே. வேறு யாருமல்ல, நமது மாகாண கவர்னராக உள்ள பவநகர் மகாராஜாவின் தர்மபத்தினியார்—பவநகர் மகாராணியார்தான். அவரைப் பேட்டி கண்டவர், மெயில் இதழில் தந்திருக்கிறார் இந்தத் தகவலை.

## வேலூர் சிறையில் தோழர்கள்.

இரணியன் நாடகத்தில் தண்டனை அடைந்து வேலூர் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் தோழர்கள் பன்னிருவரையும், 28—9—48 மாலை 3-மணிக்கு காஞ்சிபுரம் தோழர்கள் K. T. S. மணி, C. V. M. அண்ணாமலை ஆகிய இருவரும் சந்தித்துப் பேசினர். தோழர்கள் உற்சாகமாகவே உள்ளனர். இயக்கத்தைக் குறித்து முழுவிபரமும் அறிந்துகொள்வதில் அதிக ஆர்வம் காட்டினர். (ந. நி.)

7-ம் பக்கத் தொடர்ச்சி

சேர்ந்த செஞ்சிலுவைப் பிரிவு இவர் கண்காணிப்பில் இருந்துவந்தது.

இரண்டாவது உலகப் பெரும் போரில்தான், இவருடைய சேவைக்குத் தகுந்த வாய்ப்புக் கிடைத்தது. 1945 ஏப்ரல் திங்களில் பால்டிக் கடற்கரையோரமாக உள்ள லூபெக்கை, ஆங்கில வேட்டை விமானங்கள் தாக்கின. கப்பற் தளம்—இரயில்வே நிலையம் அனைத்தும் தரைமட்டமாக்கப்பட்டன. நடு இரவில், விமானத் தாக்குதல் அபாயம் நீங்கிவிட்டதாகச் சங்குகள் முழங்கின. அந்த நகரத்தை அடுத்திருந்த சிறு மாளிகை ஒன்றில் ஜெர்மனியின் தலைவர் ஹிம்லர், தங்கி இருந்தார். அவருடன், இந்த பெர்னதத், ஐரோப்பிய மக்களின் எதிர்காலத்தைப்பற்றி மிக்க கவலையோடு பேசிக்கொண்டு இருந்தார்.

போர்க் காலத்தில், ஸ்வீடன் நிலைமை மிக்க நெருக்கடியாகிவிட்டது. உள்நாட்டில் சிலர் நாஜியர்களையும், சிலர் நேச நாட்டினரையும் ஆதரிப்பவர்களாக இருந்தார்கள். பின்லாந்திலிருந்தும், பால்டிக் பிரதேசங்களிலிருந்தும் கடல் வழியாக வந்த ஆயிரக்கணக்கான அகதிகளை அன்பாகக் காப்பாற்றும்பொறுப்பை பெர்னதத் மேற்கொண்டு அதனைத் திறம்படச் செய்துமுடித்தார்.

1943 நவம்பர் மாதத்தில் நேச நாடுகளின் விமானங்கள் பெர்லினைப் பலமாகத்தாக்கின. அந்த நேரத்திலும், பெர்னதத் அங்குதான் இருந்தார் உயிருக்கும் அஞ்சாமல். மற்றோர் முறை விமானத் தாக்குதலிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள சாக்கடைக் குழியில் ஒளிந்துக்கொள்ள வேண்டிய நிலையும் இவருக்கு ஏற்பட்டதுண்டு.

ஹிம்லர், போன்ற பேர்வழிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தி, அவர்கள் வீசும் வலையில் சிக்காமல், தாம் கோரிய காரியத்தைமட்டும் வெற்றிகரமாக முடித்துக்கொள்வதென்றால் ஒரு சாதாரண மனிதனால் அவ்வளவு இலகுவாக ஆகக்கூடிய காரியமன்று. அபாரத் திறமையும், பிடிகொடுக்காமல் பேசும் நாவன்மையும், லட்சியத்தில் ஆழ்ந்த உறுதியும் உள்ளவர்களால்தான் முடியக்கூடிய காரியமாகும். இந்த நிலையில் பொதுவாகஐரோப்பிய மக்களுக்கும்,குறிப்பாக யூதர்களுக்கும் பணி பலபுரிந்த நல்லவரைத்தான், யூதர்களில் சிறு கூட்டத்தினர் சென்ற 18-9-48ல் ஜெருசலத்தில் சுட்டுக்கொன்றுவிட்டனர். அவர் இறந்துவிட்டார்; ஆனால் அவர் தம்வாழ்நாளில் ஆடம்பரமில்லாது மக்களுக்குச் செய்த சேவையின் பலனாக ஏற்பட்ட புகழ் என்றென்றும், அவர் பெயரை உலகுக்கு உணர்த்திக்கொண்டிருக்கும்.

## 200 கோடி

—✻—

இந்திய சர்க்காரின் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி நிபுணர்களும் நிருபர்களும், கவனம் செலுத்தி யூகங்களைத் தெரிவிக்க முன் வந்துள்ளனர்.

மொத்தத்திலே, கவனிக்கும் போது, நிலைமை, கவலை தருவதாக இருப்பதை அனைவரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

பொருள் உற்பத்தி பெருக வேண்டுமென்பதற்கான முயற்சிகள் முழுவெற்றிதந்ததாகத்தெரியவில்லை. பணப் பெருக்கமும், அகவிலையும் அகன்றதாகக் கூறுவதற்கில்லை.

நாடு முழுவதும், கம்யூனிஸ்டுக் கட்சியின் நடவடிக்கைகளை ஒடுக்கியது தான் கண்கூடாகத் தெரிகிறதே யொழிய, தொழிலாளர் பிரச்னையிலே இருந்துவரும் சிக்கல் தீர்ந்ததாகக் கூறுவதற்கில்லை.

சர்க்கார், முன்பு காங்கிரஸ் தலைவர்கள் மேடைகளில் பேசியபடி, இப்போது, நாட்டுத் தொழில்களைத் தனிப்பட்ட முதலாளிகளிடமிருந்து எடுத்து நடத்தப் போகின்றனரா, அல்லது, நடைமுறைக்கு அது ஒத்து வராது என்று எண்ணி, தனிப்பட்ட முதலாளிகளின் ஆதிக்கத்தை மேலும் சிலகாலம் விட்டு வைக்கப் போகின்றனரா என்பது பற்றிய, குழப்ப நிலைமையினால், புதிய தொழில்கள் வளருவது குந்தகப்பட்டு வருகிறது, என்று தொழில் நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்தச் சூழ்நிலையுடன், காஷ்மீர் போர், அகதிகள் பிரச்னை, உணவுக் கொள்முதல், போன்ற மனதை மருட்டும் பிரச்னைகள் கிளம்பி, பெரும் செலவை உண்டாக்கிவிட்டன.

ஏறக்குறைய, 200 கோடி ரூபாய், வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழக் கூடும் என்று கூறப்படுகிறது.

இந்த இருநூறுகோடி ரூபாயை, ஈடுகட்ட என்னவழி செய்வது என்பது பற்றி, பல யோசனைகள் கூறப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டும் வருகின்றன.

சர்க்கார் சிப்பந்திகளின் எண்ணிக்கையைக் குறைப்பது, சம்பளத்தைக் குறைப்பது, என்ற யோசனை கவனிக்கப்பட்டது. முதலில் இந்தச் சிக்கனத்தின் மூலம், பிரமாதமான பலன் ஏற்படக்கூடும் என்று நம்பினர். இப்போது, இந்தச் சிக்கனம், பிரச்னையின் ஓரத்தைக்கூடத் திருத்தக்கூடியதல்ல என்று தெரிய வருகிறது. சிக்கனம் எவ்வளவு மும்முரமாகச் செய்தாலும், ஒரு இரண்டுகோடி ரூபாய்க்குமேல், இதனால் மிச்சப் படுவதற்கில்லையாம். சர்க்காருக்கோ, இருநூறு கோடி வேண்டும்!

பணத்தை எப்படியாவது பெற்றாக வேண்டும், துண்டு விழுவதைத் தடுக்க, என்ற ஆர்வத்தினால், பலப்பல யோசனைகள் கூறப்பட்டதில், அனேகர் கூறியுள்ள யோசனை மதுவிலக்கைப்பற்றியதாகும். மதுவிலக்குத் திட்டத்தை நிறைவேற்றாமலிருக்க வேண்டும், ஒத்தி வைக்க வேண்டும், என்று பலமாக யோசனை கூறப்பட்டிருக்கிறது.

மத்ய சர்க்கார் இதை எவ்வளவு வலியுறுத்தினாலும், மாகாண சர்க்கார்கள், மதுவிலக்குத் திட்டத்தைக் கைவிடுவது முடியாத காரியம் என்பதை உணர்ந்து, உறுதியாக உள்ளன. மக்களின் நம்பிக்கையை இழக்கவேண்டி நேரிடும், மதுவிலக்குத் திட்டத்தைக்கைவிட்டால், என்பதை மாகாண சர்க்கார்கள் அறிந்துள்ளன. ஆகவே அந்த ஆபத்தான பரீட்சையில் இறங்க மாகாண சர்க்கார்கள் தயாரில் இல்லை.

போர்க்காலத்துக்கு முன்பு இருந்த அளவிலும் வகையிலுமே, நிலவரி இன்றும் இருந்துவருவது, நிபுணர்களின் கண்களுக்குத் தெரிகிறது. நிலவரி மாறவில்லையே தவிர, நிலத்தின் மூலம் கிடைக்கும் வருமானம், பலமடங்கு அதிகமானதாகிவிட்டது. நிலச்சுவன்தார்களுக்கு இலாபம் குவிந்திருக்கிறது. இந்த இலாபக் குவியலிலே, ஏன் ஒரு பகுதியைப், பெறக் கூடாது என்று, யோசனை கூறப்பட்டிருக்கிறது. இந்தத்திட்டத்தினால், பலகோடி ரூபாயைப், பெறமுடியும், வசூல் செலவும் அதிகமிராது என்று கருதுகிறார்கள். ஆனால் இதன் பயனாகவும், அந்த 200 கோடி ரூபாயை ஈடுகட்ட முடியும் என்று உறுதி கூறுவதற்கில்லை.

தொழிலரசர்களிடமிருந்து உதவி பெறுவது என்ற திட்டமும் அவ்வளவு வெற்றி தருமென்று கூறுவதற்கில்லை, ஏற்கனவே தொழிற்சாலை அதிபர்களும், பாங்குகளும், சர்க்காரிடம், பெரும் பணத்தைத் தந்திருக்கின்றன.

கடன்பத்திரங்களை வெளியிடுவது என்ற யோசனை கவனிக்கப்பட்டு, இப்போது, இருபது கோடி ரூபாய் கடன் திட்டம் வெளியிடப்பட்டிருக்கிறது.

இவ்வண்ணம் இந்திய சர்க்கார் இருநூறு கோடி ரூபாய் துண்டு விழுந்திருக்கும் இடர்ப்பாடான நிலையில் இருக்கிறது.

✻

## பெர்னாதத்

●

கடந்த பெரும்போரில் பெல்சன், புசேன்வாட் எனும் இரு சொற்களும், ஜெர்மன் நாஜியர்கள் அட்டூழியங்களையும், அதிக்கிரமங்களையும் நினைவுக்குக் கொண்டுவரும் தன்மையுடையனவாக இருக்கின்றன. அந்த இரு முகாம்களில், யூதர்கள் ஆண் பெண் குழந்தைகள் உட்பட நாஜியர்களின் சித்திரவதைக்குள்ளாயினர். அந்த இரு சித்திரவதைச்சிறைகூடத்திலிருந்து ஏறக்குறைய ஏழாயிரம் யூதப்பெண்களை, அவர்கள் உயிருக்கு ஆபத்து நேராமல், ஸ்வீடன் நாட்டுக்கு அழைத்துச் சென்ற பெருமை, சில யூத முரடர்களால் சில நாளைக்கு முன்பு இஸ்ரேல் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட, கவுண்ட் பெர்னாதத் எனும் ஐக்ய நாட்டுச் சங்கத்தின் மத்தியஸ்தரையே சாரும். நாஜியர்களின் கொடுமைக்குள்ளாகித் தூக்குமேடை ஏறவேண்டிய நிலையிலிருந்த பல யூதர்களை உயிர் பிச்சை தந்து காப்பாற்றிய திறமை மிக்க நன்றியாளனை, அதே யூதர்களில் சிலர் சுட்டுக் கொல்வது என்பது, எவரையும் திடுக்கிடவைக்கும் சம்பவமேயாகும்.

பெர்னாதத், பிரெஞ்சு அரச பரம்பரை வழிவந்தவர். ஸ்வீடன் நாட்டில் குடியேறி வாழ்ந்துவந்தார். காரல்ஸ்பெர்க் இராணுவக் கல்லூரியில் போர்க்கலை பலவும் பயின்று, ஸ்வீடிஷ் குதிரைப்படையில் சிறந்த வீரராகத் திகழ்ந்தார். ஸ்வீடிஷ் விமானப் பாதுகாப்புப் பிரிவைச்

(6-ம்பக்க பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 3—10—48 [ஞாயிறு

# "நம்ம சர்க்கார்"

## 2

தங்களைப் போன்ற மக்களை வெறும் பொம்மைகளாக்கிவிடத் தங்களால் முடியும் என்று தெரிந்து கொண்டுள்ள மனிதர்கள் பலர் இருக்கிறார்கள்.

இதை உணர்ந்து எதிர்க்கக் கூடிய பகுத்தறிவுள்ள மக்கள் மொத்தஜனங்களில் பத்துக்கு ஒருவர் வீதம்தான் இருக்கிறார்கள்.

இந்த அபாயத்தைக் கண்டு எதிர்த்துப் போரிடவேண்டிய மக்களெல்லாம் பெரும்பாலும் இதைக் காண்பதில்லை. கண்டாலும் என்ன செய்வதென்று அவர்களுக்குப் புரிவதில்லை.

*மக்களாட்சி எனும் மாண்புள்ள கொள்கையை நடைமுறைத் திட்டமாக்கும்போது, நயவஞ்சகம் கொண்டவர்கள், பொதுமக்களை எளிதில், தந்திரமாக ஏமாற்றிவிட முடிகிறது — ஏமாற்றுவதுடன், பொதுமக்களை, தலையாட்டிகளாக்கிவிட முடிகிறது, என்ற நிலையை விளக்கி, மேற்குறித்த கருத்தை வெளியிட்டார், பிரபல ரஷிய தத்துவ நூலாசிரியர் டாக்டர் சர்ஜ் சாகோடின் "பொதுஜனச் சீரழிவு" என்னும் தமது நூலில்.*

*முடியாட்சியின்போது, மக்கள் ஏதுமறியார், மக்களுக்குத் தக்கது எது என்பதைக் கண்டறியும் பண்பு வேந்தருக்கே உண்டு, எனவே, ஆட்சிப் பொறுப்பு முழுவதும் வேந்தரிடமே இருத்தல்வேண்டும், மக்கள் தங்கள் தனிவாழ்க்கையைப் பற்றிக் கவலை கொள்ளவேண்டுமே ஒழிய, ஆட்சிமுறை பற்றியோ, திட்டங்கள் பற்றியோ கவலை கொள்ளக்கூடாது, என்ற கோட்பாடு, வலியுறுத்தப்பட்டது. இந்தக் கோட்பாட்டினைக் கோல் கொண்டோர், வாள் முனையின் துணைகொண்டு, நிலைநாட்டினர்.*

*குடியாட்சி முறையின்போது, மக்களுக்கு ஏதும் தெரியாது என்றல்ல, மக்களுக்கு எல்லாம் தெரியும், என்று புகழுரை கூறி, ஏய்க்கப்படுகிறது. மன்னர்களின் வாள் முனைக்குப் பதில், தாள்முனை,—பேனாமுனை, — பிரசாரம், பயன்படுத்தப்படுகிறது.*

*வாள்முனையைக் காணும் போதாவது மக்களுக்கு ஆத்திரம் உண்டாகும் — பொறுத்துப் பார்த்துப் பார்த்து இனிச் சகிக்கமுடியாது என்ற நிலை ஏற்பட்டதும், வாளுக்கு வாள் என்ற பயங்கர நிலைமைக்கும் தயாராகிவிடுவர் — வரலாறு இது போன்ற பல சம்பவங்களைக் காட்டுகிறது.*

*ஆனால், ஆளவந்தார்கள், மக்களுக்கு மன்னர்கள்போல ஆத்திரமூட்டாது, அவர்களை அன்புரை கொண்டு அர்ச்சித்து, நல்வாக்குகளை வீசி நேசர்களாக்கிக் கொண்டு, எம்மை நம்புக! உமது ஊழியரன்றோ யாங்கள்! உமக்கு எது தேவை, எங்ஙனம் அதனைச் செய்தல் வேண்டும் என்ற அறிவும் அக்கறையும் எமக்கு இல்லையோ! எமது ஆற்றலிலே உமக்குச் சந்தேகமோ! என்று பசப்புரை கூறி, பிரச்சாரப் புகைப்படலத்தை ஏவியதும், பொது மக்களுக்கு, கோபமும் கொதிப்பும் அல்ல, மயக்கம் ஏற்படுகிறது—அவர்கள் சர்ஜ்சாகோடின் கூறுவதுபோல, பொம்மைகளாகி விடுகின்றனர்.*

*பொதுமக்களை இதுபோலாக்கிவிட முடியும் என்ற நம்பிக்கையும், இதுபோலாக்கிவிடக் கூடிய தந்திர பலமும் பெற்றவர்கள், ஜார்களைவிடக் கொடுங்கோலாட்சியை அமைத்துவிட முடியும், குடிஅரசு முறையிலே. எனவேதான், குடிஅரசு முறை வெற்றிபெற வேண்டுமானால், பொதுமக்கள் இடைவிடாது, விழிப்பாக இருக்கவேண்டும், தலையாட்டிகளாகிவிடக்கூடாது நம்ம சர்க்கார் என்ற பாசத்துக்கும் பயத்துக்கும் இடமளித்துவிடக் கூடாது, ஆளவந்தார்கள் ஆட்சிப்பீடம் அமருமுன்னம் சொன்னதைச் செயலில் காட்டுகிறார்களா, இல்லையா, என்பதுபற்றிக் கவனித்து வரவேண்டும், தவறாகச் செல்லத் துணிந்தால் கண்டிக்கவும் திருத்தவும், அதனால் பலன் கிடைக்காது என்று ஏற்பட்டால், அடியோடு நீக்கிப் புத்தம் புதிதாக ஆட்சிமுறை ஏற்படுத்தவும், தயாராக இருக்க வேண்டும்.*

*இவ்வளவும் செய்ய உரிமை இருக்கிறது பொதுமக்களுக்கு—இந்த உரிமையைப் பொதுமக்கள், உல்லாசப் பயணத்திலே பெறவில்லை,—தானமாக அவர்களுக்குத் தரப்பட்டதல்ல, இதைப்பெற, உருண்ட தலைகள், ஓடிய இரத்த ஆறுகள், ஏராளம்—பாடுபட்டுத் தேடிய இந்த உரிமையைப் பாழாக்கிக் கொள்ளும்போது, பயங்கரமான பாசிசம் உருவெடுக்கிறது—முடிசூடாமன்னர்கள் மூர்க்கராகின்றனர், முசோலினிகளாகின்றனர். இந்த நிலையை வரவிடாது தடுக்கத்தான், மக்கள், எப்போதும் கருத்தைக் குருடாக்கிக்கொள்ளாமல, சிந்தனையை முடமாக்கிக்கொள்ளாமல் இருக்கவேண்டும் என்று, பேரறிவாளர்கள் பலரும் கூறி வந்திருக்கின்றனர். மக்கள் தமது உரிமையின் மேன்மையை மறந்துவிட்டால், பொதுஜனச் சீரழிவு ஏற்படுகிறது என்பதைத்தான் டாக்டர் சர்ஜ் சாகோடின் என்பவர் கூறினார்.*

*நம்ம சர்க்கார் என்ற பாசத்தின் காரணமாக, இன்றைய ஆட்சியாளர்கள் செய்யும் பல சீரழிவான காரியங்களை, மறைக்கவே, பல காங்கிரஸ் நண்பர்கள் முயற்சிக்கிறார்கள்—இதன் விளைவாகப் பொதுஜனச் சீரழிவு ஏற்படுமே என்பதுபற்றி கவலையுமற்று. திருச்சிற்றம்பலத்தார், கவிபாடினார், நாட்டிலே உள்ளநிலை கண்டு-கேட்டினைக் களைந்து, நாட்டு மக்களின் வாழ்விலே புதியதோர் நலனைப் புகுத்துவோம் என்று சூளுரைத்து ஆட்சிப்பீட மேறியவர்கள், கவிராயர் காட்டும் காட்சிகள் உண்மையல்ல என்று மறுத்துக்கூற முடியாது. மக்கள்கவியல்ல,பாட—; கபோதிகளல்ல, அந்தக்காட்சிகளைக் காணாதிருக்க. காட்சிகளைக் காணுகின்றனர், ஆனால், அவைபற்றி எண்ணிட மறுக்கின்றனர் — எண்ணும் போதோ, கவிகள் பாடுகின்றனர்—வேறு சிலர் கண்ணீரே சொரிகின்றனர்.*

*நம்ம சர்க்கார் ஏற்பட்டதும் புதியதோர் நம்பிக்கையும் பிறந்தது—காரணமும் இருந்தது அந்த நம்பிக்கைக்கு.*

*நாட்டிலே உள்ள நலிவுகள் போக்கப்படக்கூடியன, கேடுகளைக்களைந்துவிட முடியும், வறுமையை ஒழித்துவிட முடியும், மக்களுக்கு நன்மைகள் ஏற்படச்செய்ய முடியும், என்று, காங்கிரஸ் தலைவர்கள், புள்ளி விபரங்களைக்காட்டிப் பேசக் கேட்டனர் பொதுமக்கள்—எனவே*

அந்தக் காங்கிரஸ் தலைவர்கள் ஆள வந்தார்களானதும், நம்ம சர்க்கார் வந்துவிட்டது, நாட்டுக்குப் புது வாழ்வு கிடைத்துவிட்டது என்று பூரித்தனர்.

ஏழைக்கு வரிமேல் வரி போடப்படுகிறது—அவன் வாழ்வு வளைந்தே போகிறது. பணக்காரர் மீது ஏற்ற வேண்டிய பாரத்தை ஏழையின் மீது போடுவது அக்ரமம் — அநீதி. ஆனால், பாழும் வெள்ளையனுக்கு, நீதியைப் பற்றி என்ன கவலை— ஏழையின் அழுகுரல் எங்கே அவன் செவியில் விழப்போகிறது—அவன் செவியிலே சீமான்களின் சிரிப்பும், பதவி வேட்டைக்காரர்களின் பசப்பும்தானே ஏறுகிறது! ஏழையின் வாழ்வைக் கெடுக்கும் வெள்ளையராட்சி ஒழிந்து நம்ம சர்க்கார் ஏற்பட்டால், வரிப்பளுவு ஏழையின் மீதா இருக்கும்! கொள்ளை அடிப்போருக்கு இடம் இருக்குமா? பண மூட்டைகள் எங்கெங்கு மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று கண்டறிந்து வெளியேகொண்டுவந்து, நாட்டுக்குச் செலவிட மாட்டோமா! நம்ம சர்க்கார் வரவேண்டும், ஏழை சுகப்படவேண்டும். கதிரவன் உதிக்க வேணடும், காரிருள் நீங்கிப்போகும்! என்று ஆயிரமாயிரம் மேடைகளிலே ஆர்ப்பரித்தனர், தலைவர்கள்—மக்கள், இவைகளைக்கேட்டுக் கேட்டு இன்புற்றது மட்டுமல்ல, இந்தத் தலைவர்கள் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தால்,—அதாவது, நம்ம சர்க்கார் ஏற்பட்டால், நாட்டுக்குப் புது வாழ்வு நிச்சயமாகக் கிடைக்கும், என்று நம்பிக்கையும் கொண்டனர்.

ஏழை தரும் வரிப் பணம் எப்படி எப்படிப் பாழாகிறது தெரியுமோ! நினைத்தாலே, நெஞ்சு வேகும். இங்கு சராசரி வருமானம் ஒன்றே காலணா! ஆமாம் நண்பர்களே! பீமனும் விஜயனும், ராமனும் கண்ணனும், சேரனும் சோழனும், ஆண்டு வந்த இந்தப்புண்யபூமியிலே, பொன் விளையும் பூமியில், ஆளுக்குச் சராசரி வருமானம், ஒன்றேகாலணா! வயிறு எரியாதா! ஒன்றேகாலணா வருமானம், ஏழை இந்தியருக்கு— ஆனால் இவர்களுக்கு ஒரு வெள்ளைக்கார வைசிராய் இருக்கிறார், இந்தச் சீமைத்துரைக்குத் தரப்படும் கொள்ளைச் சம்பளம் என்ன தெரியுமோ, மாதம் இருபத்தைந்தாயிர ரூபாய்! இது மட்டுமா! படிச் செலவுவேறு! கவர்னர்களுக்குப் பத்தாயிரக் கணக்கிலே, சம்பளம், ராணுவத்துக்கு பெரும் செலவு ஏழையின்பணம் இப்படிக் கொள்ளை போகிறது. எப்படி அவன் வாழ முடியும்? அவனிடமிருந்து வசூலிக்கப்படும் பணம் இப்படிக் கொள்ளைச் சம்பளத்துக்குச்செலவாகிவிட்டால், அவனுடைய கல்விக்கும் சுகாதாரத்துக்கும், பணம் ஏது, செலவிட. நம்மசர்க்கார் ஏற்பட்டால், இப்படியா, கவர்னர்களுக்கும் கவர்னர் ஜெனரல்களுக்கும், மேஜருக்கும், சுபேதாருக்கும், கலெக்டருக்கும் மற்றவருக்கும், கொள்ளை கொள்ளையாகச் சம்பளம் கொட்டிக் கொடுப்பார்கள்! நடைபெறுமா இந்த அநியாயம்! நம்மசர்க்கார் ஏற்பட்டால், ஐந்நூறு ரூபாய்க்கு மேல் சம்பளமே இராது!—கவர்னரானாலும் சரி கவர்னர் ஜெனரலானாலும் சரி!! சம்பளத்தின் பேரால் பாழாகும் பணத்தை மிச்சப்படுத்தி, ஏழையின் நன்மைக்குச் செலவிடுவோம். இதற்குத்தான், நம்மசர்க்கார் ஏற்பட வேண்டும் என்று கூறுகிறோம்— என்று காங்கிரஸ்தலைவர்கள் முழக்கமிட்டனர்—பொது மக்களுக்கு, நம்ம சர்க்கார் மீது, பாசம் வரத்தானே செய்யும்.

நாடு காடானால் அவனுக்கு என்ன! நமது மக்கள் நடைப்பிணமானால் அவனுக்கு என்ன! தேயிலை, ரப்பர் தோட்டத்துக்குக் கூலிகளாகச்சென்று சீரழிவுபடுகிறார்கள் நமது மக்கள், அவனுக்கு என்ன, இவைகளைப்பற்றி அக்கரையும் அன்பும் எப்படி அவனுக்கு ஏற்பட முடியும்! அவன் அன்னியன்தானே! வெள்ளைக்கார சர்க்காருக்கு நமது மக்களைப்பற்றி எப்படி அன்பு ஏற்பட முடியும்! கொள்ளை அடித்துக் கொண்டுபோய், சீமையில் கூட கோபுரம் கட்டிக்கொள்ளத்தானே இங்கே வந்திருக்கிறான். இங்கு ஆறுகள், வெள்ளப் பெருக்கெடுத்தோடி, நாட்டையும் பாழாக்கி, பயிருக்கும் தேவையானபோது உபயோகமாகாது நாசவேலை செய்கிறது. அணைகள் கட்டலாம்—தேக்கங்கள் அமைக்கலாம்—காடு கரம்புகளைத் திருத்தலாம்-ஆனால் இதற்கெல்லாம், நம்ம சர்க்கார் ஏற்பட்டால்தானே முடியும்!!—என்று எண்ணற்றமுறை பேசக் கேட்டுக் கேட்டு, மக்கள், நம்ம சர்க்கார் ஏற்பட்டாகவேண்டும் என்று 'தவம்' கிடந்ததிலே, ஆச்சரியம் என்ன.

இவ்வளவு இன்பக் கனவுகள்! சுவையுள்ள சுலோகங்கள்! எழுச்சி தரும்முழக்கங்கள்! தித்திக்கும் திட்டங்கள்! பிரமிக்கச் செய்யும் புள்ளி விவரங்கள்!!—மேடைகளிலேபேசப் பட்டன.

இவைகளை எல்லாம் கேட்ட மக்கள், எழுச்சி கொண்டதில், நம்பிக்கை கொண்டதில், ஆச்சரியமென்ன! எனவேதான் நம்ம சர்க்கார் என்ற சேதி கேட்டுச் சொக்கினர்.

நம்ம சர்க்கார் என்ற உடனே மக்களின் மனக்கண் முன்பு, மாதம் ஐந்நூறு ரூபாய் சம்பளம் வாங்கும் கவர்னர்ஜெனரல் முதற்கொண்டு, பசியார உண்டு பண்பாடிக்களிக்கும் பாட்டாளிவரையிலே, வரிசை வரிசையாகப் பல காட்சிகள் தோன்றின, இருண்ட வீட்டிலே ஓர் மணி விளக்கு ஒளிதரக் கண்டான், களித்தான். நாட்டுச் செல்வம் மேட்டுக்குடியினரின், பூட்டிய பெட்டியிலே தூங்கிக் கிடக்காமல், பொது நலனை வளர்த்திடக் கண்டான். தேயிலைத் தோட்டம் சென்று வாழ்வு தேய்ந்து போனவர்கள், தாயகம் திரும்பி வந்து, மணிக்கொடியைக் கண்டு மகிழ்ந்து, புதுவாழ்வு பெறக் கண்டான். இவ்வளவும், இவற்றினுக்கு மேலாகவும் பல இனிய காட்சிகள் மனக்கண் முன் தோன்றின நம்ம சர்க்கார் என்ற உடனே. பொதுமக்களின் ஆர்வம் பொங்கிக்கொண்டிருந்த அந்த நேரத்திலே, யாராவது ஒருவர் "தம்பி! நம்ம சர்க்கார் ஏற்படப் போவதுஉறுதி—ஆனால் அது நாட்டுக்கு நல்லது செய்யுமென்பதற்கு உறுதி கூற முடியாது—நம்ம சர்க்கார் ஏற்பட்டு அப்போதும் மாதம் 20 ஆயிரம் சம்பளம் பெறும் கவர்னர் ஜெனரலும் மற்றப்படி பெரும் பெரும் தொகை சம்பளம் வாங்கும் பெரிய அதிகாரிகளும் இருக்கத்தான் போகிறார்கள். துரைமார்களுக்குப் பதில், நம்மவர்கள் இருப்பார்கள் அந்த அலங்காரப் பீடங்களில்—ஆனால் நீ எதிர்பார்க்கிறபடி சம்பளக் கொள்ளை மட்டும் குறைந்துவிடும் என்று எண்ணாதே- அது நடவாது—" என்று சொன்னால் ஆத்திரமே கொள்வர் பொதுமக்கள், "இவன் ஆங்கிலேயனின் ஏஜண்டு" என்று தூற்றுவர். தூற்றினர். ஆனால் இன்று நம்மசர்க்காரிலே நம்மராஜகோபாலாச்சாரியார் கவர்னர் ஜெனரலாக இருக்கிறார்—

சம்பளம் எவ்வளவு? 499 ரூபாயா? நம்ம நேருவே முதல்வர்! சம்பளம் எவ்வளவு! நம்ம நேருவின் சகோதரியார் தூதுவர்! சம்பளம் எவ்வளவு! இந்தியவின் ஏழ்மையையும், சம்பளக் கொள்ளையால் அந்த ஏழ்மை அதிகப்படுவதையும், அறியாதவர்களல்ல, இவர்கள். அறிவித்தவர்கள் நாட்டுக்கு! இன்று என்ன நிலை! நம்ம சர்க்காரிலே, நம்ம தலைவர்கள், சம்பளம் எவ்வளவு பெறுகிறார்கள் — நாம் எதிர்பார்த்தபடியா — ஏழையின் மனம் குளிரும்படியா — அல்ல! அல்ல! அவர்களின் வாசகத்தின்படி கூறுகிறோம், "அந்தந்தப் பதவிகளுக்குள்ள அந்தஸ்த்துக்கு ஏற்றபடியான சம்பளம்" பெறுகிறார்கள்!! இதையா, மக்கள் எதிர்பார்த்தனர், நம்ம சர்க்காரில்?

எண்ணிப் பார்க்க வேண்டாமா காங்கிரஸ் நண்பர்கள், சொல்லும் செயலும் முரண்பட்டுப் போகும் காரணம் என்ன, எப்படி இதை நியாயம் என்று ஒப்புக்கொள்ள முடியும்—நம்ம சர்க்கார் ஏன் இப்படிப்பட்ட போக்கிலே செல்கிறது, என்றெல்லாம், யோசிக்க வேண்டாமா, தமது கட்சியினருக்குக் கூறவேண்டாமா? கடிவாளம் அறுபடும் சத்தம் கேட்ட பிறகும் கவலையற்று வண்டிக்குள் அமர்ந்து கொண்டு கிளிக்கண்ணி பாடுவதா! "பாடுகிறீரே நண்பரே! கடிவாளம் அறுந்துவிட்டதே!!" என்று பாதை ஓரம் நின்றபடி எச்சரிப்பவரைக் கண்டு, எச்சில் துப்புவதா! வண்டி நம்ம பட்டறையில் தயாரிக்கப்பட்டது — குதிரையோ, குட்டியாக இருக்கும்போதிருந்தே என்னால் வளர்க்கப்பட்டது. இதைக் குறை கூறும், துணிவு கொண்ட உலுத்தனே யார் நீ! விலகிச் செல்! வேலையைப் பார்!" — என்று வெகுண்டுரைத்து, உன் பயணத்துக்கு ஆபத்து வரக்கூடுமய்யா, குதிரையின் கடிவாளம் அறுந்துவிட்டது என்று எச்சரிப்பவர்மீது சவுக்கை வீசுவதா!

காங்கிரஸ் நண்பர்கள் இன்று இதே காரியம்தானே செய்கிறார்கள். நம்ம சர்க்காரிலே இன்னின்ன குறைகள் உள்ளன என்று எடுத்துக் காட்டினார், இன்னின்ன தவறுகளைச் செய்கிறது என்று விளக்கினால், அதனால் இத்தகைய ஆபத்து ஏற்படும் என்று எச்சரித்தால், சீறியன்றோ விழுகிறார்கள். இந்தப் போக்கு, எங்கு கொண்டுபோய் விடும்! பெர்லினுக்குத்தானே!

காங்கிரஸ், விடுதலைப் போர் நடாத்தியபோது, சொல்லொணாக் கஷ்ட நஷ்டத்துக்கு உட்பட்ட ஆயிரமாயிரம் இளைஞர்கள், இப்படிப்பட்ட "நம்ம சர்க்கார்" ஏற்படுமென்று எண்ணினார்கள்! இன்று அவர்களிலே, நேர்மையாளர்கள் யாவரும், வெட்கமும் துக்கமும் அடையக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், வெளிப்படையாகப் பேச முடிகிறதா! பேசினால், உடனே கட்சியின் தூண்கள், ஒழுங்கு நடவடிக்கை எடுக்கின்றன! தொண்டர்கள், தியாகிகள் எப்படிப்பட்ட இலட்சணம் கொண்டவர்களாக இருக்கவேண்டும் தெரியுமா என்று, பதவிக்காரரின் பஞ்சாங்கங்களாகி விட்ட ஏடுகள், உபதேசம் செய்கின்றன. பிறகு உருட்டல் மிரட்டல் நடையில் எழுதுகின்றன. தொண்டர், என் செய்வர்!

பல நாட்களாகக் காங்கிரஸ் கட்சியினராகவே இருந்துவந்தோம், அந்தக் கட்சியின் மேன்மையை நாட்டு மக்களுக்கு நாமே பன்முறை எடுத்துக் கூறிவந்தோம், நம்ம சர்க்கார் அமைக்கப்பட்டதும் இன்னல்கள் மாய்ந்துபோகும், துன்பம் தீய்ந்து போகும், நன்மை வந்தெய்தும், என்றெல்லாம் நல்வாக்குக்கொடுத்து வந்தோம், இப்போது, நாமே, 'நம்ம சர்க்காரி'ன் போக்கு, பொது மக்களின் நலனுக்கு உகந்ததாக இல்லை என்பதையும், சர்க்காரை நடத்தும் 'நம்ம கட்சி'யிலே, ஊழலும் சுயநலமும் தலைவிரித்தாடுகிறது என்பதையும் எடுத்துக் கூறினால், நம்ம கட்சியைப்பற்றி மக்கள் என்ன எண்ணுவார்கள்—நம்மைப் பற்றியும் என்ன எண்ணுவார்கள்—ஏன் நமக்கு இந்த வேதனை — வெளியே சொன்னால் வெட்கக் கேடு, என்றெண்ணி ஏக்கமடைகின்றனர்—சிலர் மனமுடைந்து போயினர்.

தொண்டர்களும் தியாகிகளும் கட்சியின் போக்கைக் கண்டு கலங்க, கதற முடியுமே தவிர, கட்சியைத் திருத்தி அமைக்கவோ, கட்சி, தவறான பாதையிலே செல்லுகிறது என்பதை நாட்டு மக்கள் உணரும்படி செய்யவோ, முடியாது—அவர்கள் அதற்கான வலிவும் வசதியும் இல்லாதவர்கள்.

ஏடுகள், நாடாள்வோரின் கேடயங்களாகி விட்டன.

தலைவர்களோ இருவகை—ஒரு சாரார் இப்போது பதவியில் உள்ளவர்கள்—மற்றோர் சாரார், இனிக் கிடைக்கும் என்ற ஆசைக்கு அடிமைப்பட்டவர்கள்—எனவே இரு சாராரும், கட்சியின்மீது 'மாசு மரு' இல்லை என்றே மக்கள் கருத வேண்டும் என்பதிலே நிரம்ப—அக்கறை கொண்டவர்கள்—அவர்களின் பேச்சு, தியாகிகளின் பெருமூச்சு மக்களின் செவியிலே விழ ஓட்டாதபடி தடுத்துவிடுகிறது.

மாற்றாந் தாய் கொடுமை புரிகிறாள், சிரித்த முகத்துடன்! கொடுமைக்காளாகும் சிறுவனோ வேதனைப்படுகிறான், ஆனால் விளக்கமாக விஷயத்தைக் கூறமுடியாது, ஊமை! தகப்பனோ செவிடு! இந்நிலையில், குடும்பம் எவ்விதம் இருக்கும்! பொதுமக்களின் இன்றைய நிலை, இப்படிப்பட்ட குடும்பநிலைபோன்றே இருக்கிறது.

இன்னமும், இதனை நம்ம சர்க்கார் என்று நம்பிக்கொண்டு, பாத்யதை கொண்டாடும் காங்கிரஸ் நண்பர்களுக்கு, திருச்சிற்றம்பலத்தாரின் கவிதையைவிட உள்ளத்தை உருக்கக்கூடிய வேறோர் சம்பவத்தையும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். கவிதையே மனதைக் கலக்கிற்று, ஒரு பெருங்கிழவனாரின் கண்ணீர், உண்மையில், காண்போருக்கு, எவ்வளவு வேதனையைத் தரும். இன்றைய காங்கிரசின் நிலைமையைக் கண்டு பாபு புருஷோத்தமதாஸ் தாண்டன் கண்ணீர் சொரிந்தார், என்று காங்கிரஸ் ஏடுகளே எழுதின.

"காங்கிரசாரிடம் ஊழலும், இலஞ்ச இலாவணமும் மிக அதிகமாகப் பரவிவிட்டது.

பதவி வேட்டை, உத்யோக வேட்டை, அரசியல் செல்வாக்கை உபயோகித்து, வியாபார வசதிகள் பெறுவது, அதிகாரிகளை மிரட்டி சுயநலக் காரியத்தில் ஈடுபடுவது ஆகிய கெட்டகுணம் குடிகொண்டு விட்டது.

ஊர்மக்கள் இந்தவிதமான நடவடிக்கைகளில் காங்கிரசார் ஈடுபடுவது கண்டு, இதுதானோ தியாகம்! இதுதானோ தேசபக்தர்களின் திருக்கலியாண குணம்!—என்றெல்லாம் கேவலமாகப் பேசுகிறார்கள்.

இப்படிக் காங்கிரசாரைப்போது மக்கள் கேவலமாகப் பேசுவது கேட்டு, எனக்குத் தலை இறக்கமாக இருக்கிறது—வெட்கமும் துக்கமும் என்னைப் பிடித்தாட்டுகிறது.

என் காங்கிரஸ் நண்பர்கள் இப்படிப்பட்ட கேவலமான நிலைமைக்கு வருவார்கள் என்று நான் துளியும் எண்ணினதில்லை.

இவ்விதம் இவர்களாகி விடுவோர்கள் என்று முன்கூட்டியே எனக்குத் தெரிந்திருந்தால், நான் இந்த நிலைமையைவிட, முன்பு இருந்த அடிமைத்தனமே மேல் என்று கூடக் கருதியிருப்பேன்.”

இவ்வாறாகவெல்லாம் கூறிக் கதறினார் காங்கிரசின் பெருங்கிழவனார் பாபு புருஷோத்தமதாஸ் தாண்டன், ஒரு பொதுக் கூட்டத்தில்.

இந்தச் செய்தி, காங்கிரஸ் ஏடுகளிலேயே வெளிவந்தது.

‘நம்மசர்க்கார்’ நடைபெறுகிறது, நமக்கென்ன பெருமைக்கும் பூரிப்புக்கும் குறைவா, இந்தச் சாககாருக்கு எதிரிடையாக கவனுவது நாக்கை வளைக்கமுடியுமா, என்று வீம்புபேசும் நண்பர்கள், தாண்டன் உதிர்த்த கண்ணீர் எப்படிப்பட்டது என்பது பற்றி எண்ணிப்பார்க்க வேண்டும். தியாகியின் கண்களிலே நீர் வழியும்படியானநிலை, ‘நம்மசர்க்கா’ரில இருப்பானேன்?—என்பது பற்றிக் காங்கிரஸ் நண்பர்கள் எண்ணிப்பார்த்தனரா? இனியேனும் எண்ணிப்பார்ப்பார்களா? எண்ணத் தொடங்கினால், ‘நம்மசர்க்கார்’ என்ற பாசப்பேச்சு, பற்பல ஊழல்களை மூடிபோடவும், சுயநலத்துக்கு வழி செய்யவும், இறுதியில பாசிசத்துக்கு ஏற்பாடு செய்யவும் பயன்படுமேயொழிய, பொதுப்பண்பை வளர்க்கவோ, நாட்டைத் திருத்தவோ, ஜனநாயகத்தைத் துவக்கவோ, பயன்படாது என்பது விளங்கும்.

பாபு தாண்டன் கதறுவதற்கு முன்பே, இந்த நிலைமையை வெளிப்படையாகவே எடுத்துரைத்தார் கிருபாளினி—காங்கிரஸ் அக்ராசனராக இருந்தவண்ணம்.

அதற்கும் சிலநாட்களுக்குமுன்பு, காந்தியாருக்கு, இந்த நிலைமையை விளக்கிச் கடிதமே எழுதினார், ஆந்திர நாட்டுப்பழம் தேசபக்தர் கொண்டா வெங்கடப்பய்யா.

சமயம் கிடைக்கும்போதெல்லாம், ஜெடப்பிரகாசும் அவர் சகாக்களும், இந்த நிலைமையை நாட்டுமக்களுக்கு எடுத்துக்கூறியபடியே உள்ளனர்.

இவ்வளவுபேரும், இளித்தவாயர்களா, காங்கிரசின் எதிரிகளா, விடுதலைப்போரிலே புறமுதுகிட்டவர்களா, தியாகத்தீயிலே குளிக்காதவர்களா, பதவிப்பித்துக் கொண்டவர்களா, பாரதமாதாவின் வைரிகளா! அல்லவே! காங்கிரசின் மகத்தான வெற்றிக்காகப் பாடுபட்டவர்கள்—நம்மசர்க்கார் ஏற்பட உழைத்தவர்கள்—அவர்கள் கூறுகிறார்கள் மனம் நொந்து நம்மசர்க்கார் அமைந்தது, பயன் ஏற்படவில்லை, ஊழல் உள்ளம் ஏற்பட்டு விட்டது நமது காங்கிரஸ்காரர்களிலேயே பலருக்கு, என்று. இந்தநிலையில், ‘நம்மசர்க்கார்’ என்று பாத்யதை கொண்டாடுவதிலே, என்னபலன்! மக்களாட்சி தக்கவிதத்தில் அமைக்கப்பட்டு, நாட்டுக்கு நல்லதோர் நிலை வரவேண்டும் என்பதிலே அக்கரை கொண்டவர்கள், இனியும் ‘இது நம்மசர்க்கார்—நாமும் குறைகூறக்கூடாது, பிறர் கூறினாலும் கேட்டுக்கொண்டிருக்க முடியாது’ என்று பேசுவது, அழகுமல்ல, அறமுமாகாது, அறிவுடைமையுமல்ல.

‘நம்மசர்க்கார்’ என்பதற்கு, நம்முடன் இருந்த ஒரு சிலர் நடத்தும் சர்க்கார், என்று மட்டும் பொருள் கொள்வது, அரசியல் தத்துவமல்ல, குடும்பக் கொஞ்சுமொழி. அந்தக் கொஞ்சுமொழி, செங்கோலுக்கு வழிசெய்யாது.

நம்மசர்க்கார், என்றால், நமது இலட்சியங்கள், இன்பக்கனவுகள், ஆகியவற்றை நடைமுறைத் திட்டங்களாக்கும் நல்லாட்சி, என்று பொருள் அமைத்து, அந்தப் பொருளுக்கு ஏற்றபடி சர்க்காரின் போக்கு இருக்கிறதா, என்று பரிசிலனை செய்து பார்ப்பதுதான், ஜனநாயகவாதியின் கடமை. இந்தக் கடமையை மறந்திடும் அளவுக்கு, ‘நம்மசர்க்கார்’ என்ற பாசம் படருமானால், பிறகு, பேரறிஞர் கூறியது போல, “தங்களைப்போன்ற மக்களைப் பொம்மைகளாக்கிவிட முடியும்” என்ற தந்திர அரசியலே வெற்றி பெறும்.

எனவே, நம்மசர்க்கார் என்பதற்கு, தக்க பொருளைக் கண்டறிவதும், அந்த இலட்சணத்துக்கு ஏற்றபடி, அமைப்பும் போக்கும் அன்றாட நடவடிக்கையும் அடிப்படைத் திட்டங்களும் உள்ளனவா என்று அலசிப்பார்ப்பதும், தவறுகள் தெரியும்போது கண்டித்துத் திருத்துவதும், காங்கிரசிலே உள்ள நேர்மையாளர்களின் கடமையாகும். நாட்டிலேயோ, வேறுகட்சிகள், காங்கிரசுக்கு ஏற்பட்டுள்ளது போன்ற வசதிகளுடன் இல்லை. இந்தச் சூழ்நிலையில் சர்வாதிகாரப்போக்கு வெகு பத்திலே சாத்தியமாகிவிட முடியும், காங்கிரசிலேயே நேர்மையாளர்கள் சிலரேனும், பாசத்தைமறந்து, விழிப்புணர்ச்சி கொள்ளாவிட்டால். தங்களுக்கு, ஏற்பட்டுவிட்ட வலிவைக்கொண்டு, பிறகட்சிகளை மிரட்டவும் அடக்கவும், அழிக்கவும் ஆர்வம் பிறப்பதும், அதிலே ஒரு அலாதியான ஆனந்தம் ஏற்படுவதும் சகஜம். ஆனால் அந்த ஆனந்தத்தையே சிலாக்கியமானது என்று எண்ணிக்கொண்டு, ஜனநாயகத்தைச் சித்திரவதை செய்வது, தற்கொலைத் திட்டம்.

நம்மசர்க்கார், என்ற சொற்றொடருக்குள்ள மாண்பு, முக்கியத்துவத்தைவிட நமதுநாடு, நமதுமக்கள், நல்லாட்சி, என்பவைகளுக்கு மாண்பு அதிகம் என்பதை மறக்கக்கூடாது.

உச்சிக்கிளையில் நாம் வீற்றிருக்கிறோம், வேலிப்பக்கம் இருந்து பேசுபவனை நாம் உதாசீனம் செய்யலாம் என்று எண்ணுவதும், தோணியிலே நாம் பயணம் செய்கிறோம், கரைஓரமிருந்து ஏதோ கூவுபவனைப் பற்றி நமக்கென்னகவலை என்று எண்ணுவதும், மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, சகஜமாகத்தான் இருக்கும்—கூர்ந்துபார்த்தால் தான், உச்சிக்கிளை முறியும் போலிருக்கிறது என்பதைக் கண்டறிந்த பிறகே, வேலி ஓரத்திலிருப்பவன் எச்சரிக்கை செய்கிறான், தோணி செல்லும் பாதையிலே பாறை உண்டு என்பதை எச்சரிக்கவே கரை ஓரம் உள்ளவன் கூவுகின்றான் என்பது விளங்கும். அதுபோலவேதான் இன்று தட்டிக்கேட்க ஒருகட்சியும் இல்லாத நிலையில் தர்பார் செலுத்தும் நண்பர்கள், அந்தத் தர்பார் போக்கிலே உள்ள தவறுகளை, “சாமான்யர்கள்” எடுத்துச்சொல்லும் போது, இவர்கள்யார்! என்று அலட்சியமாகக் கருதுகிறார்கள். அந்த அலட்சிய சுபாவந்தான், ஆட்சிமுறையைக் கெடுத்து, பொதுஜனச் சீரழிவை உண்டாக்கும்

என்று அறிந்தோர் உரைக்கின்றனர், அவனியில் வேறுபல இடங்களிலே இது போல் நடந்த சம்பவங்களை ஆதாரமாகக்கொண்டு.

நியாயமான கோரிக்கைகளுக்காக நடத்தப்படும் கிளர்ச்சிகளெல்லாம் கூட அடக்குமுறையினால் அழிக்கப்பட்டுவிடுகின்றன என்பதைக் காங்கிரஸ் நண்பர்களே அறிவார்கள்—அவர்களிலே, சிலர் அதனைத்தமது கட்சிக்கும் சர்க்காருக்கும் உள்ள மகத்தான பலத்துக்கு அத்தாட்சி என்று கூடக்கூறிப் பெருமைப்படுகிறார்கள். "அடி அம்மா! அதுக்குக் கோபம் வந்தா, மனஷசுபாவமே இராது. அடி ஒவ்வொன்றும், உடம்பிலே, அப்பளமாகத் தழும்பு உண்டாக்கிவிடும். முரடு. வலிவு." என்று அடிபட்ட பத்தினி, மறுநாள், தன் பர்த்தாவின் வலிவைப் பற்றியும் முரட்டுச்சுபாவத்தைப்பற்றியும், பெருமையோடு பேசிக்கொள்வதுண்டல்லவா — அதுபோன்ற போக்கு, அரசியலிலே இருந்திடக் காண்கிறோம்.

காங்கிரசின் மகத்தான சக்தியின் முன்பு இந்த எதிர்ப்புகள் எம்மாத்திரம். கிளர்ச்சிக்காரர்களுக்குப்பூஜை சரியாக இரண்டுதடவைகொடுத்தால் தீர்ந்தது — இருக்குமிடமே தெரியாது, என்ற பேச்சு, கதருடையினருக்கு மிக மிகச் சாதாரணமானதாகிவிட்டதுடன், அவர்களுக்குச் சந்தோஷமும் தருவதாகிவிட்டது. இந்தப்போக்கின், முழுவிளைவு, என்ன என்பதுபற்றிய எணணம் ஏற்படுவதில்லை. கிளர்ச்சிகள்—வேறு வட்டாரத்திலிருந்து கிளம்பி அழிக்கப்படும் படலம் முடிந்ததும்— காங்கிரசிலேயே உள்ள நண்பர்கள் தங்கள் கொள்கைக்காக உள்ளபடியே ஏதேனும் கிளர்ச்சி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டால்—அந்தக் கிளர்ச்சிக்கும் இதேகதிதான் ஏற்படும். இந்தச்சூட்சமம், துவக்கத்திலே, தூபமிடும் நேரத்திலே, தெரிவதில்லை.

கருத்துவேற்றுமை இயல்பாக ஏற்பட்டு, காங்கிரஸ் சர்க்கார் செய்யும் ஏதோ, ஒருதிட்டம், காங்கிரசாரில் ஒரு பகுதியினருக்குப் பிடிக்கவில்லை என்று வைத்துக்கொள்வோம்—தமது கருத்தை கமிட்டிமூலம், கடிதமூலம், மந்திரிகளைப் பேட்டி காணுவதன்மூலம், கண்டனக்கூட்டமூலம் வெளியிட்டுப்பார்த்து வெற்றிகிட்டவில்லை என்றால், கிளர்ச்சியில இறங்கத்தானே தோன்றும்—அப்போது, எந்த அழிக்கும் சக்தியைக்கண்டு காங்கிரஸ் நண்பர்கள் புளகாங்கிதமடைந்தனரோ, அதே சக்தியைக் கண்டு ஆயாசமடையவும், அச்சப்படவும் நேரிடும். அந்த நிலைமைவருவதற்கு முன்னமேயே, ஜனநாயகத்துக்கு அரண் அமைக்கவேண்டும். நியாயமான கிளர்ச்சிகளை ஒடுக்க அடக்கு முறையை வீசும்போது, "நம்ம சர்க்கார்" செய்கிறது என்று வாளாயிருந்துவிடுவது, எதிர்கால ஆபத்துக்கு இன்றே அச்சாரம்தரும் செயலாகமுடியும். எனவே தான், நமது காங்கிரஸ் நண்பர்களுக்குநம்ம சர்க்கார், என்ற பாசம் இருப்பது தான் முறை, அறம், என்றுஎண்ணி எத்தர்களின் வலையிலே வீழ்ந்துவிடாதீர்கள், என்று கூறுகிறோம்.

காங்கிரஸ்நண்பர்கள்என்னென்ன இன்பக்கனவுகள் கண்டு, 'நம்ம சர்க்கார்' ஏற்பட உதவி புரிந்தனரோ, அந்தத் திட்டங்களையும் நிறைவேற்றாமல், நாட்டின் நிலைமையையும் வளமாக்காமல், 'நம்ம சர்க்கார்' இருப்பதும், நம்ம சர்க்காராயிற்றே நாமே எப்படிக் கண்டிப்பது என்று காங்கிரஸ் நண்பர்கள் இருந்துவிடுவதும் குறைகண்டு கூறிட வேறு கட்சியினர் முன்வந்தால், இந்தக் குறைகூறும் குப்பன்களுக்கு இதைவிட்டால் வேறென்ன வேலை என்றுபேசுவதுமாக, இருந்துவிட்டால், நம்ம சர்க்காரின் போக்கைத் திருத்தும் வழிதான் என்ன, சக்திதான் எது? இந்த நிலையையும் போதாது என்று, "நம்ம சர்க்காரை" நடத்தும் காங்கிரஸ் தலைவர்களும், அவர்களோடு நடத்தும் வேறுசிலரும் சேர்ந்து, காங்கிரசிலே உள்ள கண்ணியவான்களின் கவனம், எங்கே, தப்பித்தவறி, 'நம்ம சர்க்காரின்' போக்கிலே உள்ளகுறைபாடுகளைக்கண்டு கண்டிக்கப் பயன்பட்டுவிடுகிறதோ என்று எண்ணி, அவர்களின் கவனத்தையும் சக்தியையும் வேறுபக்கம் திருப்பிவிடும் நோக்கம்கொண்டு, "அதோ பார், பார், காங்கிரஸ் விரோதி, நம்மசர்க்காரைக்குறைகூறுகிறான். விடாதே. பிடி" என்று காங்கிரஸ் நண்பர்களை, மற்றக்கட்சியினர்மீது பாயவிடும் தந்திரத்தை வெற்றிகரமாகக் கையாண்டு வருகிறார்கள். இது நாம் துவக்கத்திலே குறிப்பிட்ட அரசியல் அறிஞர் கூறியதைவிட, கேடு பயக்கும் நிலை. அவர் தந்திரசாலிகள்தங்களைப்போன்ற மக்களையேபொம்மைகளாக்கிவிடுகின்றனர் என்று மட்டுமே சொன்னார் — அதாவது சிந்தனையும் செயலுமற்றவர்களாக்கி விடுகின்றனர் என்றுகூறினார்—இதனைத்தான் பொதுஜனச் சீரழிவு என்று குறிப்பிட்டார். இங்கு நடைபெறுவதோ இதனினும் கேடு பயப்பது, பொம்மைகளாக்கி விடவில்லை — கருவிகளாக்கிவிடுகின்றனர்— நோக்கத்தைமாற்றி, சக்தியைவேறுபக்கம் திருப்பி அவர்களை, மற்றக்கட்சிமீது மோதவிட்டுவிட்டு, தமது ஆட்சியைத்தமது இஷ்டம்போல் நடத்தும் தந்திரத்தைக் கையாண்டு வருகின்றனர். யாருக்கு, நல்ல ஆட்சி அமைக்கவும், அமைந்துள்ள ஆட்சியை நல்லாட்சியாக்கவும் உரிமையும்வசதியும் வலிவும் இருக்கிறதோ, அவர்களை—காங்கிரசில் உள்ள நேர்மையாளர்களை, ஆர்வம் ததும்பும் இளைஞர்களை—தியாகம்புரிந்த தீரர்களை— வேறு அலுவலில் ஈடுபடவைத்து விட்டு, அவர்களையும் ஜனநாயகஆட்சிமுறையையும் அதனாலான நற்பலன்களையும் நாடு பெறவேண்டும் என்றஎண்ணம் கொண்டவர்களையும் விரோதிகளாக்கிவிட்டு, அந்தச்சச்சரவுநடைபெறுகிறவரையில், தங்களுக்குஇலாபம், தங்கள் ஆட்சிக்கு பலம், என்ற நோக்கத்துடன் பதவிதேடும் காங்கிரஸ் தலைவர்கள் வேலை செய்கின்றனர்—வெற்றியும் பெறுகின்றனர்—அந்த வெற்றியின் விளைவுதான், வயோதிகதாண்டனுக்கு, வேதனையைத்தருகிறது—கண்ணீரை வழியவைக்கிறது. இந்த நிலையை உண்டாக்கும்அமைப்பு, 'நம்மசர்க்காரா!' "நம்ம சர்க்காரில்" நம்ம பாபு புருஷோத்தமதாஸ் தாண்டனின் கண்களில் நீர் பெருகுவதா? ஏன்? —என்பதுபற்றி, எண்ணிப்பார்க்கவேண்டும், இலட்சிய நோக்குடைய காங்கிரஸ் இளைஞர்கள்

---

## பட்டம்மாள்—கோவிந்தராஜன் திருமணம்

15—9—48-ல் சென்னை தியாகராய நகரில் தோழியர் T. A. மதுரம் அவர்களின் தங்கை பட்டம்மாளுக்கும் கோவிந்தராஜனுக்கும் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. பல நடிகர் நடிகைகளும், முக்கியஸ்தர்களும் வந்திருந்தனர். வந்தவர்களை நகைச்சுவை அரசர் வரவேற்று உபசரித்தார். தோழர்கள் திருகூடசுந்தரம், சின்ன அண்ணாமலை முதலியவர்கள் மணமக்களுக்கு வாழ்த்துக் கூறினர்.

குளிக்கரை பிச்சப்பா நாதசுரக் கச்சேரி நடைபெற்றதுடன், மாலையில் M. S. சுப்புலட்சுமியினுடைய இசைவிருந்தும் நிகழ்ந்தது.

# "பவர் சோடா"வும் பாரதபுத்திரரும்!!

—❁—

"காங்கிரஸ் ஆட்சியின் மீது என்ன குற்றம் குறைவேண்டுமானாலும் சொல்லுங்கள் சார்!—ஆனால் ஒரு விஷயத்தைமட்டும், நீங்கள், மனதார ஒப்புக்கொண்டே ஆக வேண்டும், மறுக்கவே முடியாது" என்ற பீடிகை போட்டார், கதர்க்கடை கண்ணுசாமி.

"பீடிகை ஏனப்பா பலமாகப் போடுகிறாய்! ஒப்புக்கொள்ளக் கூடியதை நீ சொன்னால்சரி. நானென்ன கபோதியா, கிராதகனா, சொல்லு" என்றேன்.

"காங்கிரஸ் ஆட்சி, மதுவிலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறதே, அந்த மகத்தான, மானிலம் போற்றும், மகாத்மாவின் ஆத்மார்த்தமான அரிய பெரிய திட்டத்தை........" என்று வர்ணிக்கலானார் நண்பர்.

"திட்டம் மகத்தானது—அதை நமது மாகாண சர்க்கார், நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொண்ட தியாகம் கலந்த துணிவும்சரியானது........', என்று கூறி அவருடைய சிரமத்தைச் சற்று குறைத்தேன். சந்தோஷத்துடன் நண்பர் என்னைத் தட்டிக் கொடுத்துவிட்டு, "நீ எப்போதுமே கொஞ்சம் நியாயத்துக்குக் கட்டுப்பட்டவன்—உண்மையை மறைப்பதில்லை—உன்னிடம்எனக்கு அதனால் தான் அன்பு" என்று கூறினார், நான் மேலால் என்ன சொல்வேன் என்பதுபற்றி எண்ணிப் பார்க்காமல். நான், இரண்டொரு விநாடி அவருக்கு ஓய்வு அளித்து விட்டு, "உண்மையை எப்போதும் ஒப்புக்கொள்ள வேண்டும் — அது தானே நாணயமான போக்கு—நாட்டுக்கு உகந்த போக்கு," என்று பீடிகை போட்டேன். "தடைஎன்ன! அதுதான் தர்மம்" என்று கூறி என்னை ஆதரித்தார் கண்ணுசாமி.

"கண்ணுசாமி! நீயும் நானும், நாட்டிலே உள்ள நல்லறிவாளர்கள் எல்லோருமே, மதுவிலக்குத் திட்டம் தேவை என்பதையும், அந்தத் திட்டத்தைக் காங்கிரஸ் மந்திரிசபை நிறைவேற்றியதையும் பாராட்டுதலோடு ஒப்புக்கொண்டு தான் பேசுகிறோம். இதிலே விவாதம் ஏது! உண்மையை நான் ஒப்புக்கொள்ளத் தானே வேண்டும்" என்றேன். "ஆமாம்—உயர்ந்த குணம் அது தான்" என்று உபசரித்தார் நண்பர்.

"நண்பா! அந்த நற்குணம் உனக்கும் வேண்டும். நாம் இருவரும், நாட்டில் பலரும் சேர்ந்து மந்திரிகளைப் பாராட்டுகிறோமே மதுவிலக்குத்திட்டம், அது, வெற்றிதரவில்லையே — கள்ளச்சாராயம் கண்ட கண்ட இடங்களிலே, வாய்க்காலாகி விட்டதே" என்றேன். கனிப்பு கருகிற்று கண்ணுசாமிக்கு.

"அதிலும் நண்பா! கள்ளச்சாராய விற்பனையை உன் காங்கிரஸ் நண்பர்களே செய்கிறார்கள். தலையிலே காந்திக்குல்லாய் கட்கத்திலே கள்ளச்சாராயம்! இப்படி நடக்கிறதே மதுவிலக்கு உள்ள இடமெல்லாம். சாராயவாடை சாகவில்லையே, தெரியுமா?" என்றேன். இலேசாகத் தலை அசைத்தார். மீண்டும் ஒரு சிலவிநாடி ஓய்வுதந்தேன்.

"நண்பா! காளேஸ்வரராவ், தெரியுமல்லவா?" என்று கேட்டேன் "ஆஹா! பழம்பெரும் தேசபக்தர்! பிரகாசம்காருவுக்கு அடுத்த பூடி அவர்தான் ஆந்திரசிம்மம்" என்றார் "அந்தச் சிம்மம், சில நாட்களுக்கு முன்பு, பெஜவாடாவில், மன்னிக்கவேண்டும் மறந்து விட்டேன்—விஜயவாடாவில் கர்ஜனை செய்தது, படித்தாயா பத்திரிகையிலே?" என்று கேட்டேன். கண்ணுசாமியின் முகம் சற்று வாட்டமடைந்தது, "என்ன பேசியிருப்பார்—மதராஸ் மனதே தானே!" என்று கேட்டார். "அட அது அல்லப்பா. இந்த மதுவிலக்கு சம்பந்தமாக" என்று நான் கூற, நண்பர், என்ன பேசினார் என்று கேட்க; நான் கூறலானேன்.

"நண்பா! விஜயவாடா எனும் திருத்தலத்திலே, நீயும் நானும் இப்போது மந்திரிமார்களைப் பாராட்டினோமே மதுவிலக்கு, அந்தத்திட்டம் அமுலில் இருக்கிறது. ஆனால், அங்கு, காந்திக்குல்லாய் தரித்தவர்கள் திருட்டுச்சாராயத்தை "பவர் சோடா" என்று சொல்லி, சோடா பாட்டில் ஒன்று ஒரு ரூபா விலையில் விற்கிறார்களாம்." என்றேன்.

"பொய்! கட்டுக்கதை!" என்றார் கோபமாக.

"இதோ, பாரும், செப்டம்பர் 2-ந்தேதி மெயில் பத்திரிகை" என்று கூறி இதழைக் கொடுத்தேன். மிரட்சி நிரம்பிய கண்களுடன் அதைப் பார்த்தார்.

"கண்ணுசாமி! இதோ என் மொழிபெயர்ப்பு சுருக்கமாகத் தருகிறேன், சரியா! என்றுசொல்லு" என்று கூறி,

விஜயவாடா (பழய பெஜவாடா) வில் மதுவிலக்கு அமுலில் இருக்கிறது, ஆனால் ஏராளமான சாராயம் விலைக்குக் கிடைக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும்.

காந்திக் குல்லாய் அணிந்தவர்கள் சாராயம் விற்கிறார்கள்.

இங்கு இரண்டு தினுசு 'சோடா' விற்கப்படுகிறது.

ஒன்று, சாதாரண சோடா— பாட்டில் ஒரு அணா.

மற்றொன்று 'பவர்சோடா' பாட்டில் ஒரு ரூபா!!

இந்த 'பவர்சோடா' வில் என்ன இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான்!

இந்த பவர்சோடா விற்பவனைப் போலீசில் பிடித்துக் கொடுக்க ஒரு காங்கிரஸ்காரர் ஏற்பாடு செய்தால், மற்றொரு காங்கிரஸ்காரர், பெரிய அதிகாரிகளிடம் சென்று, அந்த வியாபாரியை மீட்டு வருவதற்கு வேலை செய்வார்—அவனை விடுவிக்காமல் தூங்கமாட்டார்.

நிலைமை இப்படி இருக்கிறதே, நாடு எப்படிச் சீர்ப்படும்."

என்ற மொழி பெயர்ப்பு தீட்டப்பட்ட ஏட்டைத் தந்தேன். கண்ணுசாமியின் கண்களிலே திவலைகள் தோன்றலாயின. ஏதோ, பேச முயற்சித்தார் — தொண்டை வறண்டு இருந்தது — கடைப்பையனைக் கூப்பிட்டு, "டே! ஒரு சோடா வாங்கிவா—சாதாரண சோடா— காளேஸ்வரராவ் சொன்ன பவர் சோடா அல்லப்பா—" என்று நான் சொன்னேன்.

கண்ணுசாமி, கண்டிக்க எழுந்தேன், அவசரமான வேலை என்று கூறிவிட்டுப் போனார்.

வீட்டுக்குச் சென்று, அவருடைய விஷமத்தம்பி விட்டுக்கொண்டிருந்த காற்றாடியைப் பார்த்துக் கொண்டிருந்தாராம் பொழுது போக்காக — நம்ம கடைப்பையன் என்னிடம் வந்து சொன்னான்.

"பவர்சோடாவும் பாரதபுத்திரரும்" என்று, பையன் ஒருபாட்டுக் கட்டிக் காட்டுகிறான், என்னிடம். பாருங்கள், பையனின் குறும்பை! கண்ணுசாமி காதிலே இந்தப்பாட்டு விழுந்தால் எவ்வளவு கோபமும் துக்கமும்வரும், என்று நான் கண்டித்தால், பயல், கேட்கிறான், "என் பாட்டுதானா கண்ணுசாமிக்குக் கோபம் தரும்! அப்படிபபட்ட காங்கிரஸ்காரர் கடையிலே, அவரைவிடப் பெரிய காங்கிரஸ்காரர், காங்கிரஸ்காரர்கள் கள்ளச் சாராயம் விற்கிற கண்றாவிச் சேதியைக் கூறுவது விழுந்ததே, அதனால் ஏற்பட்டமனக் கஷ்டத்தை விடவா என்பாட்டு, கஷ்டத்தைத்தரும்" என்று கேட்கிறான். நியாயம்தானே! பயல், சிறியவனாக இருந்தாலும், உண்மையை ஒப்புக் கொள்ளத்தானே வேண்டும். சரி, போடா, போய்வேலையைப்பார்! —என்று சற்று மிரட்டும் தோரணையில் சொன்னேன்.

"பவர் சோடா" விற்கும் பாரத புத்ரர்கள், அரசியல் செல்வாக்கைக் கொண்டு, கள்ளச்சாராய விற்பனை செய்யும் கயவர்களைச் சட்டம் தாக்காதபடி, பாதுகாப்பு பெற்றுத்தரும் பாதகர்கள், ஆகியோர், எவ்வளவு பெரிய பொருள் நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு, மகத்தான மதுவிலக்குத்திட்டத்தை மாகாண சர்க்கார் நிறைவேற்ற முன்வந்திருக்கிறது, என்பதை எண்ணிப்பார்த்தாவது, மது விலக்குத்திட்டத்தைக் குலைக்கும் மாபெரும் துரோகம் புரியாமலிருக்கவேண்டும். பல கோடி ரூபாய் வருமானம் கலால் மூலம் சர்க்காருக்குக் கிடைத்துவந்தது. இந்தப் பெருந்தொகையை இழந்துவிட்டாலும் பரவாயில்லை; ஏழையின் குடும்பத்திலே, குடியினால் ஏற்படும் கொடுமை ஒழிந்தால் போதும், மக்களின் பணத்தையும் பத்தியையும் மானத்தையும்பறித்து, சமுதாயத்தில் படுபாதாள நிலையிலே அவர்களைத் தள்ளும், பாழும் குடிப்பழக்கம் ஒழிந்தால் போதும் என்ற உயர்ந்த நோக்கத்துடன், மதுவிலக்குத் திட்டத்தைச் சர்க்கார் கொண்டுவந்திருக்கும் போது, சிலருடைய சீரழிவான குணமும் சுயநலமும் பணத்தாசையும் திருட்டுப்புத்தியும், திட்டத்தைத் தகர்ப்பதென்றால், மனம் பதறாதா! இந்த மாபாதகத்தை மண்டையிலடித்து ஒழிக்கவேண்டும்."—என்றுநான் சொன்னேன்.

எனக்கும் அதேதான் நோக்கம் என்றான் கடைப்பையன்.

"இந்தப் பிரச்னையிலே, கண்ணுசாமி காங்கிரஸ், நாம் வேறுகட்சி என்று பேதம் பார்க்கக்கூடாது. மதுவிலக்குத்திட்டம் வெற்றிபெற வேண்டுமென்பதிலே எல்லாக் கட்சியினருக்கும் அக்கரை இருக்க வேண்டும்— அந்தப் பொறுப்பு எல்லோருக்கும் இருந்தாகவேண்டும்" என்றேன்.

'சரி' என்றான் பையன்.

✻

## எங்கும் ஈரோடு

4-ம் பக்கத் தொடர்ச்சி

இந்தப் புள்ளிவிவரச் சேகரிப்பு, முக்கியமானது—வேறு பல முக்கியமான காரியத்துக்கு, முன்னேற்பாடானதுங் கூட.

இன்றுள்ள சர்க்கார், இந்தப் புள்ளிவிவரம் சேகரிக்கப்பட்ட உடனே, "இவ்வளவு கோடி ரூபாய் முடங்கிக் கிடப்பானேன்—நாதனுக்குத் தரப்பட்ட இந்த நகைகளை நாட்டு நற்பணிகளுக்குச் செலவிடு—பாம்பாபரணன், புலித்தோலாடையான், இந்தப் பச்சை, நீலத்துக்காக மகிழமாட்டான், தனது மைந்தர்கள் முகத்திலே வாழ்க்கையின் களிப்பு ஏற்படுவதைக்கண்டே களிப்பான், எனவே, வீணாகிக் கிடக்கும் இந்த ஆபரணக் குவியலை, நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு தரும் சாதனங்களாக மாற்றுக!" என்று உத்தரவு பிறப்பித்துவிடும், என்று எண்ணும் ஏமாளியல்ல நாம். இன்றைய ஆட்சிக்கு அந்தத் துணிவும் வராது—அந்த அளவு உள்ளத் தூய்மை ஏற்படுவதற்கு இப்போது ஆட்சியாளர்களாக உள்ளவர்கள் மனதிலே உள்ள பழமைப் பாசி இடந்தராது. என்றாலும் 'கணக்கு' எடுக்கிறார்கள்— "காப்பாற்றப்படவேண்டும்" என்று கவலை காட்டுகிறார்கள்—இது வரை, மிக மகிழ்ச்சி,—ஏனெனில், அந்தக் கணக்குத் தரப்பட்டால், பிறகு அவர்களின் எண்ணம், வேலை செய்யும் என்று நம்புகிறோம்.

இந்தப் புள்ளிவிபரம் தயாரிக்கும் நண்பர்களும், புள்ளி விபரத்தைக் காணப்போகும் நாட்டு மக்களும், இந்துமதபரிபாலனபோர்டிலே முன்னாள் பணி புரிந்தவரும், இந்நாள் கோவைக்கிழார் எனும் புனை பெயரில் ஏடு தீட்டியுள்ளவருமான ஒரு சுயமரியாதைக்காரர் அல்ல— சைவ மெய்யன்பர் — தீட்டியுள்ள கோயிற்பூனைகள் என்ற சிறு நூலை, அவ்வப்போது படித்துப் பயன்பெற வேண்டுகிறோம்.

நண்பர் பாலகிருஷ்ணனார் தயாரிக்கும் புள்ளி விபரத்துடன், அந்தப் புத்தகத்தையும் இணைத்து, அத்துடன், நாட்டின் இன்றைய தேவைகள் (ரோடு பாலம், அணைக்கட்டு, வைத்யசாலை, பள்ளிக்கூடம்போன்றவைகள்,) எவை எவை என்ற தகவலையும் சேர்த்து, அத்துடன், இந்தத் தேவைகளை இன்றைய சர்க்கார் செய்யமுடியாத நிலைமையை விளக்கி மந்திரிமார்கள் அவ்வப்போதுபேசிய பேச்சையும் இணைத்து, ஒரே புத்தகமாக்கி, பொதுமக்களுக்குத் தந்துவிட்டால் போதும்—எல்லாருக்கும், பிறகு, ஈரோடு தான்!—

நிலைமையை உணரச் செய்யவும், அதன் மூலம், நாட்டு முன்னேற்றத்துக்கான நற்கருத்துகளைப் பற்றிய எண்ணம் எழச் செய்யவும், இந்த புள்ளி விபரம் பயன்படும்—கோயிற் பூனைகள் தமது கொட்டம் இனி நடைபெற முடியாது என்பதையும் அறிந்துகொள்ள முடியும், இந்த 'கணக்கும் குறிப்பும்' எடுக்கும் காரியத்தினால். பிறகு, பகுத்தறிவு வேலை செய்யும்.

✻

## நீலமலையில் கூட்டுப் பண்ணை

தென்னாட்டில், நீலமலையில் கூட்டுறவு முறையில் பயிர் செய்வதற்கு ஒரு கூட்டுறவு நிறுவனம் அமைக்கப்பட்டிருக்கிறது. 500 ஏகர் நிலங்களை குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, ஆண்டு ஒன்றுக்கு 100 ஏகர் வீதம், அதன் அங்கத்தவர்களே உழுது பயிர் செய்வதென்றும், அதனால் விளையும் பயனை, செலவும் சேமிப்பும்போக மீதமுள்ளதைச் சரிசமத்துவமாகப் பங்கிட்டுக்கொள்வதென்றும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

# அருட்பெருஞ் சோதி!

★

*சர்தார் வேதரத்னமும் அவர் சகாக்கள் சிலருமாகச் சேர்ந்து சில நாட்களுக்கு முன்பு வள்ளலார் விழாக் கொண்டாடினராம்.*

*வள்ளலார் உள்ளத்தின் மாண்பைப் பாராட்டிப் பேசினராம். அவர் காட்டிய அறநெறியை மக்கள் பின்பற்ற வேண்டுமென்று, நெஞ்சம் நெக்கு நெக்குருகப் பேசினராம்.*

*மகிழ்ச்சி! ஆனால், வள்ளலாரின் வழி நடக்கும் மாண்பு, இத்தகு விழாக்களைக் கொண்டாடி விடுவதனால் மட்டும் வருகிறதோ!*

*வள்ளலாரின் உள்ளத்தை உண்மையாகவே கண்டு அதன்படி நாடு நிற்கவேண்டும் என்று எண்ணுபவர்களாக இருப்பின், விழா கொண்டாடுவதுமட்டும் போதாது. அவர் வகுத்த கொள்கையை நடைமுறைத் திட்டமாக்கவேண்டும். செய்கின்றனரோ! செய்வதில்லை! விழா மட்டுமே விமரிசையாகக் கொண்டாடுவர்—வீண் விளையாட்டுத்தான்.*

*இத்தகைய விழாக் கொண்டாடிகளின் போக்கை எடுத்துக்காட்டும் கட்டுரை, இது.*

* * * * * *

“தம்பி! விளக்கிலே எண்ணெயைத் தாராளமாக ஊற்று. திரியை நன்றாக முறுக்கிவிடு. தீபம் நன்றாகப் பிரகாசிக்கட்டும்.

வேட்டியை நன்றாக வெளுக்கச் சொல்லு. தூய வெண் உடை அணியவேண்டும்.

விபூதி மடலிலே நீறு நிறையப் போட்டுவை. மேனியெலாம் நீறு பூசவேண்டும். சந்தனம் இருக்கிறதா பார்.

சமையல் வேலைகளை ஜாக்கிரதையாகக் கவனி.

பாலைப் பக்குவமாகக் காய்ச்சச் சொல். பழங்கள் கெடாதபடி இருக்கட்டும்.

ஆஹா! எனது ஐயன் எவ்வளவு அருமையாக இந்தச் சிறு விஷயத்தையும் கூறியுள்ளார்.

தனித்தனி முக்கனி பிழிந்து வடித்தொன்றாகக் கூட்டி,

முக்கனி பிழிந்து அதிலே சக்கை எதுமின்றி, வடித்து பிறகு ஒன்றாகச் சேர்த்து,

என்ன அருமை! என்ன தெளிவு!

எதைத்தான் அவர் சரிவரக் கூறாது போனார். பழச்சாறு முதல், பரமன் அருட்சாறு வரை, எங்ஙனம் பெறுதல் என்பதனை எடுத்துரைத்தார் எம்மான், செந்தமிழ்க் கவி செய்த பெம்மான். அருட்பெருஞ் சோதி, தனிப் பெருங் கருணை”

என்று வடலூர் ராமலிங்க அடிகளாரின் பக்தர்களில் பலரும் கூறிக்கொண்டு, பயபக்தியுடன், தூய உடையும் வெண்ணீறும் அணிந்து அடிகளார் விழாவை அன்புடன் கொண்டாடி அருட்பா பாடி அதன் சுவை பருகி ஆனந்தங்கொண்டு “என் அரசே, என் துரையே, என் இறையே” என்று இறைஞ்சி நின்று நெஞ்சு நெக்கு நெக்குருக பூதஉடல் புளகாங்கிதமடைந்து பூஜைகள் பல புரிகின்றனர். வீதிவலம் வருகின்றனர். விழா கொண்டாடி சுத்த சமரச சன்மார்க்க போதனை செய்தும், கேட்டும், பாடல்கள் படித்தும், படித்தோர் பொருள் கூறக் கேட்டும் பரமானந்தம் அடையக் காண்கிறோம். பக்தியுடன் சற்று பண வசதியும் இருப்பின், பல்லக்கிலோ ரதத்திலோ அடிகளின் திரு உருவப் படத்தினை அமைத்து பவனி வருகின்றனர். பக்தி, பணம் இருந்து அத்துடன் யூகமும் இருப்போர், ஏழைகளுக்குச் சோறிடுகின்றனர். பாடல் தெரிந்ததுடன், பண்ணின் பண்பும், பயிற்சியும், குரல் இனிமையும் உடையார் அருட்பாவைப் பாடி, இசை இன்பத்தையும் தருகின்றனர். எல்லாம் சரி!

ஆனால், “பக்தர்கள்” செய்யும் விழாவினுக்கும் அவர் தம் மற்றை நாள் செயலுக்கும் உள்ள பேதம் எத்துணை என்பதைத்தான் நாம் கண்டு மனம் நோகிறோம். விழா நாளன்று அருட்பாவும் மற்றைய நாட்களிலே மருட்பாவுமாகவன்றோ பக்த கோடி உள்ளனர். அருட்பெருஞ் ஜோதி ஓர்நாள் தோன்றி மறைந்ததும் மறுகணம் இருண்ட இடத்திலேபோதானே இராமலிங்கரின் நினைப்படி தொழுபவர் தாமும் புகுந்து மற்றைபோர் புகவும் கண்டு வாழ்கின்றனர், இஃதா அருட்பா அருளிய அண்ணலுக்கு அவர் அடியார்கள் காட்டும் நன்றி!

வேடம் களைமின்! வீணாட்டம் தவிர்மின்! விரைந்து சென்று உலகுக்கும் உள்ளத்துக்கும் உரைமின் உத்தமர் இராமலிங்கர் உரைத்தவற்றுள் உள்ள சத்துள்ள பொருளை எல்லாம் சகலரும் உணரட்டும் என்று தான் நாம் யோசனை கூறுகிறோம்.

இராமலிங்க அடிகளார் தமது சொல்மூலம் உலகினுக்கு உரைத்துள்ள உண்மைகளை உலகினுக்கு எடுத்துரைத்து அவை காட்டும் வழி செல்லும்படி மக்களை நடாத்துவதை விட அவருக்கு ‘பக்தர்கள்’ செய்யக் கூடிய, செய்ய வேண்டியன பிறவொன்றுமில்லை.

தான் பெற்றமகவு தவழ்ந்துவிளையாடி மழலைமொழி புகன்று, தன் முன் விளையாடுதல் கண்டு தாய் இன்புறுதல்போலவும், தான் ஆளும்நாடு தக்கோர் நாடாகி, பஞ்சமும் பிணியும் நீங்கி பாலும் தேனும் பருகினோர்போல, மக்கள் இன்ப வாழ்வு வாழக்காணும் கொற்றவன் களித்தல்போலவும், தாம் உரைத்தமொழி கேட்டு அதன்வழி நின்று, மற்றையோரையும் நிற்கவைக்கும் ‘மேன்பு’ கொண்டோரைக் கண்டே அடிகள் களிப்பரேயன்றி, விழாவும் வேடிக்கையும் வெட்டிப்பேச்சும் விளக்கும் செய்தவரின், மகிழார், மனம் மிகவாடி, ‘மதியிலீர் உமக்கோ நான் அருட்பா தந்தேன். ஆடம்பாடலுக்கும், ஆர்பாட்டத்துக்கும் இஃதோ நான்? இதுவோ, நீவிர் எனை அறிந்த தன் அழகு’ என்று கூறுவார் என்பது திண்ணம். தான் திறம்பட இரவு பகலாக உழைத்து வரைந்ததோர் சித்திரத்தை சிறு குழந்தை சிறு சிறு துண்டுகளாகக் கிழிக்கக் கண்டால், சித்திரக்காரன் அது தன்னைச் சித்திரவதை செய்வதென்றே கருதிக் கலங்குவான்.

அதுபோன்றே தோத்திரஞ்செய், இராமலிங்கர் விழாவை சமுதாயம் நடத்திவிட்டு சமூகத்திலே [illegible] ரசம் புகமார்க்கம்செய்ய [illegible] சீர்திருத்தச் செயலை [illegible]

கமோ உதவியோ தராமலுமிருக்கும் "உத்தமர்களைக்" கண்டால்!

எற்றுக்கு இவர்கள் இராமலிங்க அடிகளைப் போற்றுகின்றனர்? மோட்சலோகக் கதவின் சாவியை அவர் தந்துவிடுவார் என்றா; அன்றி மோசமான கருத்துக்களை மதத்தின் பேரால்மக்களிடைபுகுத்திக்கெடுத்த மந்தமதியினர்களைக் கடிந்துரைத்து, "இதோ இது தீது, இது மோசம், இது தவறு" என எடுத்துக்காட்டி, சன்மார்க்கம் வகுத்துக்காட்டினார், என்பதனுக்கா! தோலுக்கா, சுளைக்கா? நரம்புக்கா? அது இசைக்கும் தொனிக்கா? சக்கைக்கா? சாறுக்கா? எதில் ஐயன்மீர் உமது நாட்டம் செல்லவேண்டும்.

அருட்பெருஞ்ஜோதி என்பதனுக்கு ஆயிரம காண்டில் விளக்கு போட்டு அழகு காண்பது என்றா பொருள். அருட்பாவின் அழகினை உணர்தல் எனின் அதனைப் பாடிப் பொருள் கூறிப் பரவசமடைவதா அன்றி அக்கருத்துகளின்படி நடப்பதுமா நடத்துவிப்பதுமா? எது தேவை? எது விழா? எது செயல் வேண்டும் என்றே கேட்கிறோம் இராமலிங்கரின் பக்தர்களை.

யாருக்கு எதை, ஏன், எவ்விதத்திலே அவர் உரைத்தார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

"மதமெனும் பேய் பிடித்தாட்ட ஆடுகின்றோர்" தம்மை நோக்கி, "பேருற்ற உலகில் உறுசமய மத நெறி எனும் பேய்ப் பிடிப்பற்ற பிச்சுப்பிள்ளை விளையாட்டென" உணர்ந்திடுவீர் என்றும், "பன்னெறிச் சமயங்கள் மதங்கள் என்றிடும் ஓர் பவ நெறி இதுவரை பரவியது, இதனால் சென்னெறி அறிந்திலர் இறந்திறந்து உலகோர் செறி இருள் அடைந்தனர் ஆதலின்" "திரு அருள் நெறி" கூறுகிறேன் கேண்மின் 'சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்" "சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி நேத்திரங்கள் போற்காட்ட நேராவே"

"வேதாகமங்கள் என்று வீண் வாதம் ஆடுகின்றீர், வேதாகமத்தின் விளைவறியீர், சூதாகச் சொன்னதலால் உண்மை வெளி தோன்ற உரைத்தல் இலை, என்ன பயனோ இவை" என்று கேட்டு "இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை இருவாய்ப்புப் புன் செயில் எருவாக்கிப்போட்டு, மருட்சாதி சமயங்கள் மதங்கள் ஆச்சிரம வழக்கம் எலாம் குழிக்கொட்டி மண்மூடிப் போட்டு" விடுங்கள், ஏனெனில "நால்வருணம் ஆச்சிரம ஆசாரம் முதலாம் நவின்ற கலைச்சரிதம எலாம பிள்ளை விளையாட்டே"யாகும், நானும், "சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தேனே சாத்திரக் குப்பையும் தணந்தேன்" என்று தமது அனுபவத்தையும் எடுத்துக் கூறி "கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப்போக" என்று முறைத்து சமரச சன்மார்க்க நெறிக்கு வருக என்று இராமலிங்கனார் மக்களை அழைத்தார்.

அந்த அழைப்புக்கேட்டு அகங்குழைந்த அன்பர்கள் என்செய்கின்றனர். விடுமெழுகி விளக்கேற்றி, ஏடு திருப்பி இரைந்து கூவி, ஏதேதோ விளையாட்டு விளையாடி விழாக் கொண்டாடுகின்றனர்.

சாதிமத பேதம் பித்துப்பிள்ளை விளையாட்டு என்றார் அவர். இவர் அந்த பித்தம் போக்கினரோ!
இல்லை!

சாத்திரக் குப்பையிலே புரளாதீர் என்றுரைத்தாரே அவர், இவர் புரளாது விட்டனரோ!
இல்லை!

வேதாகமங்கள் சூதான மொழிகள் என எச்சரித்தாரே அடிகள், பக்தர்கள் விடுத்தனரோ அவைகளை?
இல்லை!

நால்வருணம் கூடாது என்று நவின்றாரே அவர், இவர் அதனை நீக்கினரோ?
இல்லை!

மருட்சாதி சமயங்கள் முதலியனவற்றை குழிக்கொட்டி மண்மூடிப் போட்டுவிடுங்கள் என்று கூறினாரே, அது செய்தனரோ?
இல்லை!

வேறு என் செய்தனர்? விழா கொண்டாடினர், விளக்கேற்றினர். வீதிவலம் வந்தனர். தனித்தனி முக்கனி பிழிந்தனர்! பக்குவம் செய்து பருகினர்.

வாழையும் கத்தரிப் பிஞ்சும், முருங்கையும் பிறவும் நறுக்கிக் கொட்டிச் சமைத்தனர், காய்கறிக் குழம்பெலாம் கடுக ஒழிக என்று கூறி உண்டனர். அருட்பெருஞ் ஜோதி தனிப்பெருங் கருணை என்று முழக்கினர், அருட்பா படித்தனர், அயர்ந்தனர், துயின்றனர்!

ஜாதியும் போலிச் சமயமும் நால்வருணமும் அதன் ஆச்சார அனுஷ்டானங்களும், சாத்திரமும், வேதமும், ஆகமும், அடிகள் எவை எவை தவிர்மின் என்று எடுத்துரைத்தாரோ அவைகள் எல்லாம் விழா கொண்டாடுபவரை நோக்கி, சிரித்துவிட்டு, வீணர் விழா இன்று. எமது வெற்றி விழா என்றும் உளது. இன்று அவர்கள் அருட்பா படிப்பர், நாளைமுதல் எமதடி பணிவர், இன்று இராமலிங்கரின் பக்தர்களாயினோர் நாளை முதல் எமது அடிமைகள்" என்றுரைத்து இடிக்கும்!

அந்தோ! அந்தோ! எத்தனை எத்தனை நன்னெறிகள் இந்நாட்டிலே நாவாரப் பேசிப் பேசியே மங்கி மடிந்தன! எத்துணை பெரியார்கள், அடியார்கள் இங்கு பூஜிக்கப்பட்டே கொல்லப்பட்டனர்! எத்தெந்த அருள் மொழிகள் புகழப்பட்டு மறக்கப்பட்டன! ஏன் பிறந்தனர் இந்நாட்டில்! ஏன்!

2-ம் பக்கத் தொடர்ச்சி

காஞ்சி. கலியாணசுந்தரன் சிறிது நேரம் பெரியாரின் தொண்டினைப் பாராட்டிப் பேசினார்.

சென்னை 'போர்வாள்' ஆசிரியர் தோழர். மா. இளஞ்செழியன் B. A. (Hons), பெரியார் அவர்கள் பொது வாழ்வில் நுழைவதற்கு முன்பு தமிழ் நாடும் தமிழர்களும் இருந்த நிலையையும், பெரியாரின் பிரசாரத்திற்குப் பின்னர் இன்று இங்கு ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியையும், அரசியல், பொருளியல், மதஇயல், சமூகஇயல் முதலிய வாழ்க்கைத் துறைகளில் பெரியாரின் சேவையால் மக்கள் பெற்றுள்ள உலகியல் அறிவினையும் விளக்கிக்காட்டினார். வைக்ளிப், லூதர், வால்டேர், பிராட்லா, இங்சர்சால்போன்று மக்களுக்கு மதியூட்டிய பெருமை தமிழ்நாட்டில் பெரியார் அவர்களுக்கே உரித்தாகும் என்றும் கூறினார். தலைவர் முடிவுரைக்குப்பின், பெரியார் வாழ்க, இந்தி ஒழிக, தமிழ் வாழ்க, எனும் ஒலிகளுடன் கூட்டம் முடிவுற்றது.

Edited Printed & Puplished by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.